بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர் காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 19

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

8 ஷவ்வால் 1437 ஹிஜ்ரி கமரி 14 வஃபா 1395 ஹிஜ்ரி ஷம்ஸி 14 ஜூலை 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இறைவனின் வார்த்தை ஒரு வலுவான தாக்கத்தை தன்னிடம் கொண்டிருக்கின்றது. ஒரு பசுமரத்தாணி போன்று அது உள்ளத்தில் பதிந்து விடுகின்றது. மேலும், உள்ளத்தில் ஒரு தூய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உள்ளத்தை தன் பக்கம் ஈர்க்கின்றது. எவர் மீது அது இறங்குகிறதோ அவரை களத்திலுள்ள வீரராக ஆக்கி விடுகின்றது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இறைவனின் உரையாடல்கள் ஒரு சிறப்பான அருளையும், மகத்துவத்தையும் இன்பத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றன. இறைவன் சமீஃ (நன்கு கேட்பவன்) ஆகவும், அலீம் (நன்கு அறிந்தவன்) ஆகவும், ரஹீம் (மீண்டும் மீண்டும் கருணை காட்டக்கூடியவன்) ஆகவும் இருப்பதால் இறையச்சமுள்ள உண்மையாளரான விசுவாசமிக்க தனது அடியார்களின் வேண்டுதல்களுக்கு அவன் பதில் அளிக்கின்றான். இந்த கேள்வியும் பதிலும் பல மணி நேரங்கள் வரை நீடிக்கலாம். அடியான் மிகவும் பணிவுடன் சில கேள்விகளைக் கேட்கும்போது சில நொடிகள் வரை ஒரு மயக்க நிலை அவரை ஆட்கொண்ட பிறகு அந்த மயக்க நிலையின் திரை மறைவில் அவருக்கு பதில் கிடைக்கின்றது. இறைவன் எத்தகைய கரீம் (கருணைமிக்கவன்) ஆகவும், ரஹீம் (மீண்டும் மீண்டும் கருணை காட்டக் கூடியவன்) ஆகவும், ஹலீம் (மிகவும் சகித்துக் கொள்பவன்) ஆகவும் இருக்கின்றான் என்றால் ஆயிரம் முறை ஓர் அடியான் சில கேள்விகளைக் கேட்டாலும் அவனுக்கு பதில் கிடைக்கின்றது. ஆனால், இறைவன் தன்னிறைவு பெற்றவனாகவும், ஞானத்தையும் பொருத்தமான தருணத்தையும் கருத்தில் கொள்பவனாகவும் இருப்பதால் சில கேள்விகளுக்குப் பதில் கூறும் போது அவன் தனது கருத்தைத் தெரிவிப்பதில்லை. அந்த பதில்கள் ஷய்த்தானிடம் இருந்து அல்லாமல் இறைவனிடமிருந்தே தரப்படுகின்றது என்பது எப்படி தெரிய வரும்? என்று கேட்பதாக இருந்தால், அதற்கான பதிலைக் கூட நாம் இப்போது தந்து விட்டோம். இதைத் தவிர ஷய்த்தான் ஊமையாவான். அவனது நாவு சொற்செறிவையும் உச்சரிக்கும் திறனையும் பெற்றிருக்காது. ஊமையைப் போன்று அந்த நாவிற்கு சொற்செறிவு மற்றும் அதிக அளவில் விஷயங்களைக் கூறுகின்ற ஆற்றல் இருக்க முடியாது. ஷய்த்தான் நாற்றமுள்ள வடிவத்தில் வெறுமனே ஒவ்வொரு சொற்றொடரையும் உள்ளத்தில் இடுகின்றான். இன்பமுள்ள மகத்துவமிக்க சொற்களைக் கூறுவதற்கான நல்வாய்ப்பு அல்லது சில மணி நேரங்கள் வரை உரையாடலின் தொடரை, கேள்விகளுக்கு பதில் கூறுவதற்காக நீடிக்கச் செய்கின்ற ஆற்றல் ஆரம்பத்திலிருந்தே அவனுக்கு கொடுக்கப்படவில்லை. தனது இல்ஹாம்களில் ஒரு வல்லமையையும் உயர்ந்த தகுதியிலுள்ள மறைவான விஷயங்களைத் தெரிவிக்கின்ற முன்மாதிரியையும் அவனால் காட்டவும் முடியாது. மேலும், அவனது தொண்டையும் அடைத்திருக்கும். எழுச்சிமிக்க உரத்த குரலால் அவனால் பேச முடியாது. திருநங்கைகள் போன்று அவனது குரல் மென்மையாக இருக்கும். இந்த அடையாளங்கள் மூலம் ஷய்த்தானிய வஹியை உங்களால் அடையாளங்கண்டு கொள்ள முடியும். ஆனால், இறைவன் ஊமையோ செவிடனோ ஒன்றும் செய்ய இயலாதவனைப் போன்றவனோ அல்லன். அவன் கேட்கின்றான். உடனுக்குடன் பதிலளிக்கின்றான். அவனது வார்த்தையில் மகத்துவமும் திகிலும் உரத்த குரலும் இருக்கின்றது. மேலும், அந்த வார்த்தை தாக்கம் நிறைந்ததாகவும் இன்பமாகவும் இருக்கின்றது. ஷய்த்தானின் வார்த்தை மெதுவானதாகவும் பெண்ணைப் போன்றும் சந்தேகத்திற்குரியதாகவும் இருக்கும். அதில் அச்சுறுத்தலும் மகத்துவமும் உரத்த குரலும் இருக்காது. அதிக நேரம் வரை அது நீடித்திருக்க முடியாது. விரைவாக அவனது குரல் சோர்வடைந்து விடுகின்றது. அதிலும் கூட பலவீனமும் கோழைத்தனமும் வெளிப்படுகின்றது. ஆனால், இறைவனது வார்த்தை சோர்வடைந்து விடக் கூடியதாக இருப்பதில்லை. எல்லா வகையான ஆற்றலையும் அது தன்னகத்தே கொண்டிருக்கின்றது. பெரும் பெரும் மறைவான விஷயங்களையும் வல்லமைமிக்க வாக்குறுதிகளையும் கொண்டதாக அது இருக்கும். மேலும், அதிலிருந்து இறைவனின் கம்பீரம், மகத்துவம், தூய்மை ஆகியவற்றின் மணம் வருகின்றது. ஷய்த்தானின் வார்த்தையில் இந்த சிறப்புத்தன்மை இருப்பதில்லை. மேலும், இறைவனின் வார்த்தை ஒரு வலுவான தாக்கத்தை தன்னகத்தே கொண்டிருக்கின்றது. ஒரு பசு மரத்தாணி போன்று அது உள்ளத்தில் பதிந்து விடுகின்றது. உள்ளத்தை தன் பக்கம் ஈர்க்கின்றது. எவர் மீது அது இறங்குகிறதோ அவரை களத்திலுள்ள வீரராக ஆக்கி விடுகின்றது. எதுவரையென்றால் அவரைக் கூர்மையான வாளால் துண்டு துண்டாக வெட்டினாலும், அவரைத் தூக்கில் போட்டாலும், உலகில் சாத்தியமுள்ள எல்லா துன்பங்களையும் அவருக்கு இழைத்தாலும், எல்லா வகையான அவமரியாதையையும் இழிவையும் அவருக்கு ஏற்படுத்தினாலும் அல்லது எரிகின்ற நெருப்பில் அவரை உட்கார வைத்தாலும் அல்லது அவரை எரித்தாலும் அவர் என் மீது இறங்குகின்ற இந்த வார்த்தை இறைவனுடையதல்ல என்று ஒருபோதும் கூறமாட்டார். ஏனென்றால் இறைவன் அவருக்கு முழுமையான உறுதியை வழங்கி விடுகின்றான். தனது முகத்தின் பேரன்பராக அவரை ஆக்கி விடுகின்றான். உயிர், கண்ணியம், பொருள் ஆகியவை அவரது பார்வையில் ஓர் இலையைப் போன்றே இருக்கின்றது. முழு உலகமும் அவரை தனது கால்களுக்குக் கீழே போட்டு நசுக்கினாலும் அவர் தனது இறைவனை விட்டு விட மாட்டார். நம்பிக்கையிலும் வீரத்திலும் (கொண்ட கொள்கையில்) உறுதியாக நிலைத்திருப்பதிலும் அவர் ஈடிணையற்றவராக இருப்பார். ஆனால், ஷய்த்தானிடமிருந்து இல்ஹாமை பெறுபவர்கள் இந்த ஆற்றலைப் பெற்றிருக்க மாட்டார்கள். அவர்கள் கோழைகளாக இருப்பர். ஏனென்றால், ஷய்த்தான் கோழையாக இருக்கின்றான்.

ஷய்த்தானிய கனவு அல்லது இல்ஹாமில் ஏதாவது மறைவான செய்தி இருக்க முடியுமா? முடியாதா? என்ற கேள்விக்குரிய பதில் இதுவாகும். ஷய்த்தானிய கனவு அல்லது இல்ஹாமில் திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருவது போன்று சில நேரங்களில் மறைவான செய்தியும் இருக்க முடியும். ஆனால், அது மூன்று அடையாளங்களை தன்னகத்தே கொண்டிருக்கும். முதலாவதாக, அந்த மறைவான செய்தி இறை வல்லமையை வெளிப்படுத்தக் கூடிய செய்தியாக இருக்காது. இறைவனது வார்த்தையில் இந்த வகையிலான மறைவான செய்திகள் இருக்கும். அதாவது இந்த நபர் தீங்கு விளைவிப்பதிலிருந்து விலகாமல் இருந்தால் நாம் அவரை அழித்து விடுவோம். மேலும் உண்மையாக நடந்து கொண்ட இந்த நபருக்கு நாம் இன்னின்ன வகையில் கண்ணியத்தை வழங்குவோம். நாம் நமது நபிக்கு ஆதரவாக இன்னின்ன அடையாளங்களைக் காட்டுவோம். அவற்றுடன் எவரும் போட்டி போட முடியாது. நாம் நிராகரிப்பவர்கள் மீது இந்த தண்டனையை இறங்குவோம். நம்பிக்கை கொண்டவர்களுக்கு இந்த வகையில் வெற்றியையும் உதவியையும் வழங்குவோம் போன்ற இறை வல்லமையை வெளிப்படுத்துகின்ற மறைவான செய்திகள் அரசாங்கத்தின் ஆற்றலை தன்னகத்தே கொண்டிருக்கின்றன. அத்தகைய முன்னறிவிப்புகளை ஷய்த்தானால் செய்ய முடியாது. இரண்டாவதாக, ஷய்த்தானிய கனவு அல்லது இல்ஹாம் கருமியைப் போன்று இருக்கும். அதில் அதிகமான மறைவான செய்திகள் இருக்காது. ரஹ்மானிடமிருந்து இல்ஹாமைப் பெறுபவருக்கு எதிரில் அத்தகைய நபர் ஓடி விடுகின்றார். ஏனென்றால், ரஹ்மானிடமிருந்து இல்ஹாமைப் பெறுபவருக்கு எதிரில் அவருக்கு கிடைக்கும் மறைவான செய்தி எந்த அளவு குறைந்த அளவில் இருக்கும் என்றால் அது கடலுக்கு எதிரில் ஒரு துளி போன்று இருக்கும். மூன்றாவதாக,

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இந்த வசனத்தில் அல்லாஹ் இம்மை மற்றும் மறுமை சீராகக்கூடிய ஒரு விஷயத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளான். அது என்னவென்றால், *லஅல்லகும் தத்தகூன்* அதாவது நீங்கள் இறையச்சம் பெற வேண்டும் என்பதற்காக கவனமூட்டியுள்ளான். இஸ்லாத்திற்கு முந்தைய மார்க்கங்களிலும் நோன்பு கடமையாக்கப்பட்டிருந்தது போன்று இஸ்லாத்திலும் கடமையாக்கப்பட்டுள்ளது என்பதால் மட்டும் நோன்பிற்கு முக்கியத்துவம் இல்லை. மாறாக, நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதால் அது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதன் மூலம் நீங்கள் தீமையிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என்பதனால் ஆகும்.

நீங்கள் இறையச்சத்தில் முன்னேற வேண்டும் என்பதே நோன்பின் உண்மையான நோக்கமாகும். தர்பிய்யத்திற்கான ஒரு மாதம் வழங்கப்பட்டுள்ளது. இதில் இறையச்சத்தின் தரத்தை உயர்த்துங்கள். இந்த தக்வா உங்களின் நன்மைகளின் தரத்தையும் உயர்த்தியவாறு உங்களை நிரந்தரமான நன்மைகளிலும் நிலைபெறச் செய்யும். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தையும் பெற்றுத் தரும். கடந்த காலப் பாவங்களும் மன்னிக்கப்படும்.

இன்று இங்கு மார்க்கத்தின் பெயரில் பெயர் தாங்கி ஆலிம்கள் முஸ்லிம்களிடமிருந்து எப்படிப்பட்ட பணிகளைச் செய்ய வைக்கின்றனர் என்றால் அவைகள் முற்றிலும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு மாற்றமானதாகும். மேலும் இறையச்சத்தை விட்டு விலகியவையாகும். அஹ்மதி நற்பேறு பெற்றவர்களாவர். அவர்களுக்கு காலத்தின் இமாம் மற்றும் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியம் கிடைத்துள்ளது. அன்னார் நமக்கு இஸ்லாமிய போதனைகளின் எல்லா நுணுக்கங்களின் பக்கமும் கவனமூட்டியுள்ளார்கள். தக்வா என்றால் என்ன? தக்வாவை எந்தெந்த பொருள்களின் மூலம் பெற முடியும்? மேலும் தனது ஜமாஅத் மக்களிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்ன எதிர்பார்க்கின்றார்கள்? இதுபோன்ற விஷயங்களை அறிவதற்கும் புரிவதற்கும் நான் இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துள்ளேன். அதை இப்போது உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். இந்த விஷயங்கள் நம்மை இறையச்சத்தில் முன்னேற்றியவாறு இறையச்சத்தில் நிலைபெறச் செய்கின்றன. மேலும், இறையச்சத்தைப் பெறுவதற்காக எந்த தர்பிய்யத்திற்கான மாதத்தைக் கடந்து கொண்டிருக்கிறோமோ அதற்கான செயல் திட்டத்தையும் வகுத்துக் கொடுக்கின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறையச்சம் தொடர்பாக தமது எழுத்துக்களிலும் கட்டளைகளிலும் கூறிய கருத்துக்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அவற்றின் ஒளியில் அவர்கள் ஜமாஅத் சகோதரர்களுக்கு வழங்கியுள்ள முக்கிய போதனைகள்

காவென்ட்ரி (யூ.கே) -ஐச் சார்ந்த மதிப்பிற்குரிய மர்ஹூம் அப்துல் ஹமீது சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய தாஹிரா ஹமீது சாஹிபா அவர்களின் ஜனாஸா ஹாஸிர் தொழுகையையும், பாகிஸ்தானிலுள்ள அடக் மாவட்டத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஷரீஃப் அஹ்மது அவர்களின் மகனான மதிப்பிற்குரிய ஹமீது அஹ்மது சாஹிப் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். அவர்களைப் பற்றிய நன்மைகளை எடுத்துக் கூறியவாறு அன்னாருக்காக ஜனாஸா காயிப் தொழுகையையும் ஹுஸூர் (அய்) அவர்கள் தொழ வைத்தார்கள்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்**
**10 ஜுன் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **10 இஹ்ஸான்** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِينُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۔
يٰٓأَيُّهَا الَّذِينَ اٰمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமை –யாக்கப்பட்டது போன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர்கள் ஆகலாம். **(2:184)**

இந்த வசனத்தில் அல்லாஹ் இம்மை மற்றும் மறுமை சீராகக்கூடிய ஒரு விஷயத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளான். அது என்னவென்றால், لَعَلَّكُمْ تَتَّقُونَ *லஅல்லகும் தத்தகூன்* அதாவது நீங்கள் இறையச்சம் பெற வேண்டும் என்பதற்காக கவனமூட்டியுள்ளான். இஸ்லாத்திற்கு முந்தைய மார்க்கங்களிலும் நோன்பு கடமையாக்கப்பட்டிருந்தது போன்று இஸ்லாத்திலும் கடமையாக்கப்பட்டுள்ளது என்பதால் மட்டும் நோன்பிற்கு முக்கியத்துவம் இல்லை. மாறாக, நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதால் அது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதன் மூலம் நீங்கள் தீமையிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என்பதனால் ஆகும். நோன்பு என்றால் என்ன? இறைவனது விருப்பத்தைப் பெறுவதற்காக ஒரு மாதம் தன்னைத்தானே சாதாரண நாட்களில் செய்ய அனுமதி வழங்கப்பட்ட ஆகுமான விஷயங்களிலிருந்தும் தடுப்பதாகும்.

எனவே, இந்த மாதத்தில் மனிதன் இறைவனுக்காக ஆகுமான விஷயங்களிலிருந்தும் தவிர்ந்திருக்கின்றான் என்கின்ற போது ஆகுமற்ற மற்றும் தீய விஷயங்களை ஒரு மனிதன் செய்வது என்பது இயலாததாகும். நான் இந்த நாட்களை அல்லாஹ்வின் விருப்பத்திற்கு முன்னுரிமை வழங்கியவாறு கழிக்க வேண்டும். மேலும் அல்லாஹ் தவிர்ந்திருக்குமாறு கூறியவற்றிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். அல்லாஹ் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளவற்றை செய்ய வேண்டும் என்ற ஆன்மாவை முன்னிறுத்தியவாறு நோன்பு வைக்கப்பட வேண்டும். இந்த ஆன்மா நோக்கமாக இல்லாமல் இருந்தால், இதன்படி செயல்படுவதற்கு முயற்சி செய்யா விட்டால் இந்த நோன்புகள் பலனற்றவையாகும்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களை பசியாக வைத்திருக்க வேண்டும் என்பது இறைவனுக்கு தேவையற்றதாகும். நீங்கள் இறையச்சத்தில் முன்னேற வேண்டும் என்பதே நோன்பின் உண்மையான நோக்கமாகும். தர்பிய்யத்திற்கான ஒரு மாதம் வழங்கப்பட்டுள்ளது. இதில் இறையச்சத்தின் தரத்தை உயர்த்துங்கள். இந்த தக்வா உங்களின் நன்மைகளின் தரத்தையும் உயர்த்தியவாறு உங்களை நிரந்தரமான நன்மைகளிலும் நிலைபெறச் செய்யும். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தையும் பெற்றுத் தரும். இவ்வாறு கடந்த காலப் பாவங்களும் மன்னிக்கப்படும்.

ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: ''ஈமானின் நிலையில் எவர் ரமலானின் நோன்புகளை நோற்பாரோ, தனது ஆன்மாவை பரிசீலித்திவாறு நோன்பு வைப்பாரோ அவருடைய கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்படும்.'' (புகாரி கிதாபுஸ் ஸவ்ம் பாபு மன் சாம ரமலான ஈமானன் வ இஹ்திஸாபன் வநிய்யதின் ஹதீஸ் எண்.1901)

எனவே, கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டால், தக்வாவை மேற்கொண்டு மனிதன் அதில் நிலைத்து விட்டால் பிறகு மனிதன் நிச்சயமாக ரமலானைக் கடந்து சென்றதன் நோக்கத்தில் வெற்றி பெற்று விடுவான். மாறாக, அவன் தனது வாழ்நாளின் நோக்கத்தையே அடைந்து விடுவான். அல்லாஹ் திருக்குர்ஆனில் தக்வாவினால் என்னென்ன பலன் கிடைக்கும் என கூறியுள்ளான். فَاتَّقُوا اللّٰهَ يٰٓأُولِي الْأَلْبَابِ لَعَلَّكُمْ تُفْلِحُونَ *ஃபத்தகுல்லாஹ யாஉலில் அல்பாப் லஅல்லகும் துஃப்லிஹூன்* – அதாவது, அறிவுடையவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அதன் மூலம் நீங்கள் வெற்றி பெறுங்கள். **(5:101)**

எனவே, வெற்றி பெற விரும்பாத மனிதர் யார் இருக்கிறார்? உலகின் வெற்றிகள் இங்கேயே இருந்து விடும். அசல் வெற்றி இவ்வுலகிலும் வெற்றி மற்றும் மறுமையிலும் வெற்றி பெறுவதாகும். அல்லாஹ் கூறுகின்றான்: அறிவுடையவர்களே! கேளுங்கள். அந்த வெற்றி இறையச்சத்தில் தான் இருக்கிறது.

இன்று இங்கு மார்க்கத்தின் பெயரில் பெயர் தாங்கி ஆலிம்கள் முஸ்லிம்களிடமிருந்து எப்படிப்பட்ட பணிகளைச் செய்ய வைக்கின்றனர் என்றால் அவைகள் முற்றிலும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு மாற்றமானதாகும். மேலும் இறையச்சத்தை விட்டு விலகியவையாகும். அஹ்மதி நற்பேறு பெற்றவர்களாவர். அவர்களுக்கு காலத்தின் இமாம் மற்றும் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியம் கிடைத்துள்ளது. அன்னார் நமக்கு இஸ்லாமிய போதனைகளின் எல்லா நுணுக்கங்களின் பக்கமும் கவனமூட்டியுள்ளார்கள். தக்வா என்றால் என்ன? தக்வாவை எந்தெந்த பொருள்களின் மூலம் பெற முடியும்? மேலும் தனது ஜமாஅத் மக்களிடம் ஹஸ்ரத்

மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்ன எதிர்பார்க்கின்றார்கள்? இதுபோன்ற விஷயங்களை அறிவதற்கும் புரிவதற்கும் நான் இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துள்ளேன். அதை இப்போது உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். இந்த விஷயங்கள் நம்மை இறையச்சத்தில் முன்னேற்றியவாறு இறையச்சத்தில் நிலைபெறச் செய்கின்றன. மேலும், இறையச்சத்தைப் பெறுவதற்காக எந்த தர்பிய்யத்திற்கான மாதத்தைக் கடந்து கொண்டிருக்கிறோமோ அதற்கான செயல் திட்டத்தையும் வகுத்துக் கொடுக்கின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''தக்வா சிறிய ஒன்றல்ல. இதன் மூலம் மனிதனது ஒவ்வோர் அக ஆற்றல்களையும் ஆட்கொண்டுள்ள அனைத்து ஷய்த்தான்களையும் எதிர்கொள்ள வேண்டியதுள்ளது. இந்த அனைத்து ஆற்றல்களும் நஃப்ஸே அம்மாரா –வின் நிலைமையில் மனிதனுக்குள் உள்ள ஷய்த்தானாகும்.'' அதாவது, தீமையின் பக்கம் தூண்டக்கூடிய ஆற்றல்கள் மற்றும் நன்மையைத் தடுக்கக்கூடிய இவை மனிதனுக்குள் உள்ள ஷய்த்தானாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''இந்த ஆற்றல்கள் சீர்திருத்தம் அடையவில்லை என்றால், அதாவது உங்களில் நஃப்ஸே அம்மாராவின் வடிவில் ஷய்த்தானாக இருப்பவைகளை சீர்திருத்தவில்லை என்றால் இதன் விளைவு என்னவாகும் எனில் இது மனிதனை அடிமையாக்கி விடும்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''அறிவும் சிந்தனையும் தவறாக பயன்படுத்தப்பட்டு ஷய்த்தானாக ஆகி விடுகின்றன. அறிவு இருக்கிறது. இது சிறந்த ஒன்றாகும். மனிதன் அறிவாளியாக இருந்தால் பெரும் பெரும் பணிகளைச் செய்கின்றான். இந்த அறிவும் மனித சிந்தனையும் இதில் மனிதன் பெருமை கொள்ள ஆரம்பித்து விட்டால், தவறான பணிகளுக்காக இதனை பயன்படுத்த ஆரம்பித்து விட்டால் அல்லது நன்மைகளுக்கு எதிராக இதை நிறுத்தினால் இவைகள் ஷய்த்தானாக ஆகி விடுகின்றன.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''இறையச்சம் உடையவர்களின் பணி என்னவென்றால், இவை மற்றும் இதுபோன்ற மற்ற ஆற்றல்களை சரிசெய்வதாகும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 33; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இறையச்சம் உடையவர்கள் யார்? இதுபோன்ற சமயத்தில் அவர்களின் பணி என்ன? அறிவு மற்றும் சிந்தனை போன்று இறைவன் மனிதனுக்கு வழங்கியுள்ள ஆற்றல்களைச் சரியான சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதுதான் இறையச்சமுடையவர்களின் அசல் பணியாகும். இவைகள் சரியான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படவில்லை என்றால் இவைகளே மனிதனுக்கு இழப்பை ஏற்படுத்துகின்றன. அல்லாஹ்விடமிருந்து தூரம் விலக்குகின்றன. ஷய்த்தானுக்கு நெருக்கமாக்கி விடுகின்றன.

பிறகு இன்னோரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: ''தக்வாவின் விஷயங்கள் நுணுக்கமானவைகளாகும். அதனைப் பெறுவதற்காக உள்ளத்தில் இடம் கொடுங்கள். எவருடைய செயல்களில் சிறிதும் பகட்டு இருக்குமோ இறைவன் அவனுடைய செயல்களை திருப்பி அவனது முகத்தில் எறிகின்றான்.'' எந்த செயலிலும் காட்டுதல், பகட்டு, செயற்கைத்தனம் இல்லாமல் இருக்க வேண்டும். இது இருக்கும் என்றால் பிறகு அந்த செயல் இறைவனுக்கானது அல்ல. அது இறை வணக்கங்களானாலும் சரி, திருக்குர்ஆன் ஓதுவதாக இருந்தாலும் சரி, நோன்பு வைப்பதாக இருந்தாலும் சரி அல்லது வேறு ஏதேனும் நன்மையான காரியமாக இருந்தாலும் சரியே.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''இறையச்சம் உடையவராவது கடினமானதாகும். நீ பேனாவை திருடி விட்டாய் என உங்களிடம் ஒருவர் கூறினால், நீங்கள் ஏன் கோபம் கொள்கிறீர்கள்?'' எனது பேனா இங்கிருந்தது. அதை நீ திருடி விட்டாய் என ஒருவர் உங்களிடம் கூறினால், நீங்கள் கோபம் கொள்கிறீர்கள். ஏன் கோபம் கொள்கிறீர்கள்? நீங்கள் இறைவனுக்காக மட்டுமே அஞ்ச வேண்டும்? நன்மை இருக்கும் என்றால், இறையச்சம் இருக்கும் என்றால் பிறகு இந்த கோபத்திலிருந்து விலகியிருப்பது இறைவனுக்காக இருக்க வேண்டும். சின்ன விஷயத்திற்கு உங்களுடைய 'நான்' என்ற அகந்தையைக் கொண்டு வராதீர்கள். மாறாக, தங்களது செயலை இறைவனுடைய விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''இந்தக் கோபம் ஆன்மா உண்மையானதாக இல்லாமல் இருந்ததால் ஏற்பட்டது. உங்களுடைய உண்மையான நோக்கம் இறைவனுடைய விருப்பமாக இல்லாமல் இருந்தது. மாறாக, நீங்கள் தனது அகந்தையின் பக்கம் சென்று கொண்டிருந்தீர்கள்.'' எதுவரை உண்மையான முறையில் ஏராளமான மரணங்கள் வரவில்லையோ அதுவரை ஒருவர் இறையச்சமுடையவராக ஆவதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''அற்புதங்களும், இறை அறிவிப்புகளும் கூட தக்வாவின் நிபந்தனைகளாகும். அசல் இறையச்சமே ஆகும்.'' எனக்கு இல்ஹாம்கள் வருகின்றன அல்லது நான் அற்புதங்களைக் காட்டுகிறேன் என்று ஒருவர் கூறினால், இது தக்வாவில் கிடைக்கக் கூடிய இரண்டாம் பட்ச நன்மைகளாகும். அசல் தக்வாவே ஆகும். ''எனவே, நீங்கள் இல்ஹாம்களுக்கும், கனவுகளுக்கும் பின்னால் செல்லாதீர்கள். மாறாக, தக்வாவைப் பெறுவதன் பக்கம் செல்லுங்கள். எவர் இறையச்சமுடையவராக இருக்கிறாரோ அவருடைய இல்ஹாம்களே சரியானவையாகும். தக்வா இல்லை என்றால் இல்ஹாம்களும் நம்பத்தக்கவைகள் அல்ல. அதில் ஷய்த்தானின் பங்கு இருக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன.''

''ஒருவருக்கு இல்ஹாம் வருவதை வைத்து அவரது இறையச்சத்தை அடையாளம் காணாதீர்கள்.'' இவருக்கு அதிகமான கனவுகள் வருகிறது. எனவே, இவர் இறையச்சம் உடையவராவார்; மிகவும் நல்லவராவார்; இல்ஹாம்கள் இவருக்கு வருகிறது; ஆன்மீகக் காட்சிகள் வருகின்றன எனக் கருதாதீர்கள். அவ்வாறு இல்லை. மாறாக, அவருடைய இல்ஹாம்களை அவருடைய தக்வாவின் நிலையைக் கொண்டு பரிசோதியுங்கள். இல்ஹாம்களும் கனவுகளும் சரியா எனத் தெரிய வேண்டும் என்றால் இறையச்சமும் இருக்கிறதா என்பதைப் பாருங்கள். சில சின்னச் சின்ன விஷயங்கள் உள்ளன. உதாரணமாக, எவரோ ஒருவர் நீ என்னுடைய இன்ன பொருளை எடுத்துக் கொண்டாய் என்று கூறினால் கோபம் வந்து விடுகிறது. கோபம் வருவது, தனது உரிமைக்காக பிறருக்கு இழப்பை ஏற்படுத்துவது ஆகிய இவற்றிலிருந்து விலகி இருக்கவில்லை என்றால் அவர் நான் உண்மையான கனவுகள் காண்கிறேன் என இலட்சம் முறை கூறினாலும் அவை அனைத்தும் வீணானதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''ஒருவருக்கு இல்ஹாம் வருவதை வைத்து அவரை கணக்கிடாதீர்கள். மாறாக, அவருடைய இல்ஹாம்களை அவரது தக்வாவின் நிலையை வைத்து சோதித்துப் பாருங்கள். எல்லா பக்கமும் கண்களை மூடிக் கொண்டு முதலில் தக்வாவின் படித்தரங்களைக் கடந்து செல்லுங்கள். நபிமார்களின் முன்மாதிரியை நிலைநாட்டுங்கள். எத்தனை நபிமார்கள் வந்தார்களோ அவர்கள் அனைவரின் நோக்கமும் தக்வாவின் வழிகளைக் கற்றுக் கொடுப்பதாகவே இருந்தது. اِنْ اَوْلِيَآؤُهٗ اِلَّا الْمُتَّقُوْنَ *இன் அவ்லியா வுஹூ இல்லல் முத்தகூன்* – இறையச்சமுடையவரே அவனது நண்பர்கள் ஆவர். **(8:35)** ஆனால், திருக்குர்ஆன் தக்வாவின் நுணுக்கமான வழிகளைக் கற்றுத் தந்துள்ளது. சிறந்த நபி சிறந்த உம்மத்தை எதிர்பார்க்கிறார். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் மீது நபித்துவத்தின் சிறப்புகள் நிறைவுற்றன. நபித்துவத்தின் சிறப்புகள் நிறைவுற்றதுடன் நபித்துவமும் நிறைவுற்றது. அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற விரும்பினால், அற்புதங்களைக் காண விரும்பினால், அசாத்தியமானவைகளைச் சாத்தியமாகக் காண விரும்பினால் அவர் தனது வாழ்வையும் அசாத்தியமானதாக ஆக்க வேண்டும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 10, பக்கம் 301-302; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, நாம் புரட்சியைக் கொண்டு வர வேண்டிய தேவை உள்ளது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் என்றால், அன்னாரின் உம்மத்தைச் சார்ந்தவர்கள் என்றால் பிறகு நாம் அன்னாரின் மேலான முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். மேலும் அதற்கு அல்லாஹ்வுடன் தொடர்பு அதிகமாக இருக்க வேண்டும். மேலும் உண்மையான இறையச்சம் உருவாக வேண்டும்.

பிறகு ஒவ்வொரு நன்மையின் ஆணிவேர் இறையச்சமாகும் என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:

''இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். தக்வா எல்லாவற்றின் வேராகும். ஒவ்வொரு நுணுக்கத்திலும் நுணுக்கமான பாவத்திலிருந்தும் பாதுகாப்பாக இருப்பது என்பதே தக்வாவின் பொருளாகும். எதில் தீமைக்கான சந்தேகம் இருக்குமோ அதிலிருந்து விலகியிருப்பதே தக்வாவாகும். வெளிப்படையாகத் தெரிகின்ற தீமையிலிருந்து மட்டும் தவிர்ந்திருப்பது அல்ல. மாறாக, எதில் தீமை இருக்கும் என்ற சந்தேகம் இருக்குமோ அதிலிருந்து விலகி இருப்பதாகும். உள்ளத்தின் உதாரணம் சிறு சிறு வாய்க்கால்கள் பிரிகின்ற ஒரு பெரிய ஆற்றைப் போன்றதாகும். அவற்றை சீலா அல்லது ராஜ்பா என்று கூறுவார்கள்.'' அதாவது, பஞ்சாபில், இந்தியா – பாகிஸ்தானில் சின்ன வாய்க்கால்ளை சீலா அல்லது ராஜ்பா என்று அவர்களது உள்ளூர் மொழியில் கூறுவார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''உள்ளம் எனும் ஆற்றிலிருந்தும் சிறு சிறு கால்வாய்கள் பிரிகின்றன. உதாரணமாக, நாக்கு போன்றவை. நாக்கு உள்ளது; கை உள்ளது. இவைகளின் மூலம் நடைபெறும் பணிகளின் தாக்கம் உள்ளத்தில் ஏற்படுகிறது. சின்ன வாய்க்காலின் தண்ணீர் அசுத்தமாக இருக்குமென்றால் பெரிய ஆற்றின் தண்ணீரும் அசுத்தமாகத்தான் இருக்கும் என்று கணிக்க இயலும். எனவே, ஒருவரின் நாவு அல்லது கை, கால்கள் தூய்மையாக இருக்கிறதென்றால் அவருடைய உள்ளமும் அவ்வாறே உள்ளது என்று கருதிக் கொள்ளுங்கள்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 321; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஒருவரது நாவு தீயதாக உள்ளதென்றால் நோன்பு வைத்து கொண்டே சண்டை சச்சரவு மற்றும் ஏச்சுப் பேச்சுக்களிலிருந்து விலகி இருப்பதில்லையோ அல்லது அவரது கைகளினால் தவறான காரியங்கள் நிகழ்கின்றதென்றால் அவருடைய உள்ளமும் தூயதாக இல்லை எனப் புரிந்து கொள்ளுங்கள். மேலும், இது தக்வாவை விட்டு விலகியதாகும்.

பிறகு தமது வாழ்க்கையை எளிமையானதாக கழிக்க வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''தனது வாழ்க்கையை எளிமையில் கழிக்க வேண்டும் என்பது இறையச்சம் உடையவர்களுக்கான நிபந்தனையாகும். இது தக்வாவின் ஒரு கிளையாகும். இதன்மூலம் நாம் தகாத கோபத்தை எதிர்கொள்ள வேண்டியுளள்து.'' தேவையில்லாத கோபத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கோபம் சரியான சந்தர்ப்பச் சூழலுக்கேற்ப இருக்குமென்றால் அது ஆகுமானதாகும். ஆனால் தேவையில்லாமல் கோபப்படுவது சின்னச் சின்ன விஷயங்களில் கோபப்படுவது மற்றும் சண்டை சச்சரவுகள் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்திருங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''பெரும் பெரும் ஞானிகள் மற்றும் உண்மையாளர்களின் இறுதி மற்றும் கடினமான இலக்கு கோபத்திலிருந்து தவிர்ந்திருப்பதேயாகும்.'' எல்லாவற்றிற்கும் மேலான கஷ்டமான பணி கோபத்திலிருந்து தவிந்திருப்பதாகும். தனது உணர்வுகளை கட்டுக்குள் வைப்பதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''ஆணவமும், அகங்காரமும் கோபத்தினால் தான் உருவாகின்றன.'' மனிதனிடம் அகங்காரம் இருப்பதனால்தான் கோபமும் வருகின்றது. தன்னைத்தானே ஒரு பொருட்டாகக் கருதுகிறான். பணிவு இருப்பதில்லை. ஏழ்மை இருப்பதில்லை. இதன் காரணமாகத்தான் கோபத்தின் நிலை உருவாகிறது. இந்த கோபம்தான் இன்றைய நாட்களில் உலகில் எல்லா இடங்களிலும் வீடுகளிலிருந்து பெரிய மட்டம் வரை எல்லா இடங்களிலும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''மனிதன் தனது ஆன்மாவிற்கு பிறரை விட முன்னுரிமை வழங்கும் போதுதான் கோபம் ஏற்படுகிறது. எனது ஜமாஅத்தினர் தங்களுக்குள் ஒருவர் மற்றவரை விட சிறியவர் பெரியவர் என எண்ணுவதை அல்லது ஒருவர் மற்றவர் மீது அகங்காரம் கொள்வதையும் இழிவாகப் பார்ப்பதையும் நான் விரும்பவில்லை. பெரியவர் யார்? சிறியவர் யார்? என்பதை அவன் அறிகின்றான். இது ஒரு வகையான எள்ளி நகையாடுதலாகும். எவரிடத்தில் எள்ளி நகையாடுதல் உள்ளதோ அந்த எள்ளி நகையாடுதல் ஒரு விதையைப் போன்று வளர்ந்து அவனுடைய அழிவிற்குக் காரணமாகி விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.'' ஒருவரை இழிவாகக் கருதினாலோ, குறைவாகக் கருதினாலோ, ஏதாவது ஒரு வகையில் எள்ளி நகையாடினாலோ, எவரையேனும் இழிவாகக் காண்பதோ இவைகள் எள்ளி நகையாடுதல் என்ற வட்டத்திற்குள் வருகின்றன. இந்த எள்ளிநகையாடுதல் என்ற விதை உள்ளத்தில் நிலைத்து விட்டால் பிறகு அது அதிகரிக்கிறது. இதன் விளைவு என்னவாக இருக்கிறதென்றால் அது மனிதனை அழித்து விடுகின்றது. எனவே இதிலிருந்து தவிர்ந்திருங்கள் என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''சிலர் பெரியவர்களைச் சந்திக்கும் போது மிகவும் கண்ணியத்துடன் நடந்து கொள்கின்றனர். ஆனால், எளியவரின் பேச்சை எளிமையுடன் கேட்பவரே பெரியவராவார். அவருடைய உள்ளத்திற்கு ஆறுதல் வழங்க வேண்டும். அவருடைய பேச்சிற்கு கண்ணியம் அளிக்க வேண்டும். எந்த மனங்கோணக்கூடிய பேச்சையும் நாவில் கொண்டு வரக் கூடாது. அல்லாஹ் கூறுகிறான்: وَلَا تَنَابَزُوْا بِالْاَلْقَابِ بِئْسَ الْاِسْمُ الْفُسُوْقُ بَعْدَ الْاِيْمَانِ وَمَنْ لَّمْ يَتُبْ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ நீங்கள் ஒருவர் மற்றவரை பட்டப்பெயர் அல்லது தீய வார்த்தைகளைக் கூறி அழைக்காதீர்கள். இந்த செயல் தீயவர்களுடையதாகும்.'' அதாவது, எவரையேனும் தீய வார்த்தைகளால் அழைப்பது போன்றவற்றை மார்க்கத்தை விட்டு விலகியவர்களே செய்கின்றனர். அவர்கள் நேரான பாதையை விட்டு விலகியவர்களாவர். தீயவர்கள் யார்? சரியான பாதையை விட்டு விலகியவர்கள் ஆவர். பொய்யர்கள், பாவம் செய்பவன், தீய நடத்தை உடையவன், கட்டுப்படுதலை விட்டு வெளியேறியவன் இப்படிப்பட்டவர்களே தீயவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''இந்த செயல் தீயவர்களுடையதாகும். எவரையேனும் பழித்துரைப்பவர் அவரும் அதேபோன்று பழித்துரைத்தலுக்கு ஆளாகாத வரை மரணிக்க மாட்டார். தனது சகோதரர்களை இழிவானவர்களாகக் கருதாதீர்கள். ஒரே நீரூற்றிலிருந்து அனைவரும் நீரருந்தும் போது எவரின் நற்பேற்றில் அதிக நீர் அருந்துதல் உள்ளது என்பதை எவரால் தெரிந்து கொள்ள முடியும்? எந்த உலகச் சட்டங்களின் அடிப்படையிலும் எவரும் கண்ணியத்திற்குரியவராக முடியாது. எவர் இறையச்சமுடையவரோ அவரே இறைவனின் பார்வையில் பெரியவராவார். اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللّٰهِ اَتْقٰكُمْ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ அதாவது உங்களில் அதிக இறையச்சமுடையவரே நிச்சயமாக உங்களில் கண்ணியத்திற்கு உரியவராவார். நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறியக்கூடியவன் ஆவான்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 36; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு இறையச்சம் உடையவர் யார்? என்பதைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''மென்மையாகவும், எளிமையாகவும் நடப்பவரே இறையச்சமுடையராவார் என்பது இறை வேதத்திலிருந்து தெரிய வருகிறது. அவர்கள் அகங்காரமான முறையில் பேசுவதில்லை. சிறியவர்கள் பெரியவர்களிடம் பேசுவதைப் போன்று அவர்களுடைய பேச்சு இருக்கின்றது.'' இறையச்சம் உடையவர் யார்? ஒவ்வொருவரிடமும் ஒரு சிறியவன் பெரியவரிடம் பேசுவதைப் போன்று அவர்கள் பேசுவர். அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும், பெரியவராக இருந்தாலும் கூட அவர்களிடம் இந்தப் பண்பு காணப்படுகிறது. அதாவது, அவர்கள் மிகவும் பணிவுடன் பேசுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''எந்நிலையிலும் நாம் நமது வெற்றி எதில் உள்ளதோ அதையே செய்ய வேண்டும். அல்லாஹ் எவருக்கும் வேண்டப்பட்டவன் அல்ல. அவன் குறிப்பாக இறையச்சத்தை எதிர்பார்க்கின்றான். எவர் இறையச்சத்தை மேற்கொள்வாரோ அவர் உயர்வான அந்தஸ்தை அடைவார். ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் அல்லது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் யாரும் வாரிசு அடிப்படையில் கண்ணியத்தைப் பெறவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் தந்தையார் அப்துல்லாஹ் இணை வைப்பவராக இருக்கவில்லை. ஆனால், அவர்களிடம் ஓர் ஒளி இருந்தது. இது அல்லாஹ்வின் அருளாகும். அன்னாரின் இயல்பில் இருந்தவற்றின் காரணமாக கிடைத்தாகும். நபிமார்களின் தந்தையாக விளங்கிய ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது உண்மை மற்றும் விசுவாசத்தின் காரணமாக தனது மகனை தியாகம் செய்யத் தயங்கவில்லை. அன்னாரும் நெருப்பில் போடப்பட்டார்கள். நமது எஜமானராகிய ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய உண்மைத்தன்மை மற்றும் விசுவாசத்தைப் பாருங்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் எல்லா வகையான தீமையையும் எதிர்த்தார்கள். அனைத்து வகையான இன்னல்களையும், கஷ்டங்களையும் சகித்துக் கொண்டார்கள். ஆனால், அவைகளைப் பற்றி பொருட்படுத்தவில்லை. அதே உண்மைத் தன்மை மற்றும் விசுவாசத்தின் காரணமாக அல்லாஹ் அருள் செய்தான். ஆக, இதுவே நமக்கு இருக்கின்ற மேலான முன்மாதிரியாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 37; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: எவ்வாறு உண்மையான ஞானத்தை பெற முடியும்? உண்மையான ஞானம் மற்றும் உண்மையான அறிவை அல்லாஹ்வின் பக்கம் குனியாதவரை பெறவே முடியாது. எனவேதான், முஃமீனின் ஞானத்தின் பார்வைக்கு அஞ்சுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் அவர் இறைவனின் ஒளியைக் கொண்டு பார்க்கிறார். சரியான ஞானப் பார்வை மற்றும் உண்மையான அறிவு இறையச்சம் கிடைக்காதவரை ஒருபோதும் கிடைக்காது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் வெற்றி பெற விரும்பினால் அறிவுடன் நடந்து கொள்ளுங்கள். சிந்தியுங்கள். சிந்திக்குமாறு திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஒரு பக்கம் ஒருவர் தனது அறிவை தவறாக பயன்படுத்தினால் அது அவரின் அழிவிற்குக் காரணமாகி விடும். மறுபக்கம் அல்லாஹ் கூறுகிறான்: அறிவைப் பயன்படுத்துங்கள். சிந்தியுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வலியுறுத்தி இதனைக் கூறியுள்ளார்கள். திருக்குர்ஆனில் இந்த விஷயம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனை சிந்தியுங்கள். அது அல்லாஹ்வின் வேதமாகும். அது மூடப்பட்ட புத்தகமாகவும் இருக்கிறது. திறந்த புத்தகமாவும் இருக்கிறது. அதன் மறைவான விஷயங்களை அறிய முயற்சி செய்யுங்கள். அதன் பொருளையும் படியுங்கள். விளக்கத்தைப் படியுங்கள். ரமலான் நாட்கள் திருக்குர்ஆன் ஓதப்படுகிறது. அத்தோடு தர்ஸும் கொடுக்கப்படுகிறது. அதன் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: உங்களுடைய உள்ளம் தூய்மையாகி விட்டால் இறையச்சத்தின் பாதையில் முன்னேறினால் பிறகு இந்த இரண்டின் காரணமாக رَبَّنَا مَا خَلَقْتَ هٰذَا بَاطِلًا سُبْحٰنَكَ فَقِنَا عَذَابَ النَّارِ எங்கள் இறைவா! நீ இதை வீணாகப் படைக்கவில்லை. நீ தூயவன். எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக! (3:192) எந்த நிலை உருவாகும். இது உங்களுடைய உள்ளங்களிலிருந்து வெளி வரும். அப்போது படைப்பினங்கள் ஏன் இருக்கின்றன? என்பது புரிய வரும். அது உண்மையான படைப்பாளனின் உண்மைத்துவம் மேலும் மார்க்கத்திற்கு உதவக்கூடிய விதவிதமான அறிவுகள் வெளிப்பட வேண்டும் என்பதற்காகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 66; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஒருபுறம் அறிவு (இன்றைய காலத்து புதிய அறிவு) மக்களை அல்லாஹ்விடமிருந்து தூரம் எடுத்துச் செல்கிறது. மறுபக்கம் அறிவைப் பயன்படுத்தினால் அல்லாஹ்வின் இருப்பு தெரிய வரும். அல்லாஹ்வின் படைப்பு பற்றி தெரிய வரும் என்று அல்லாஹ் கூறுகிறான்.

இன்றைய நாட்களில் மக்கள் இறைவன் இல்லை என்கின்றனர். அவர்களின் மார்க்கக் கண் குருடாக இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு இறைவன் தென்படுவதில்லை. தனது அறிவு மற்றும் சிந்தனையைக் கொண்ட உலகை மட்டும் காண்கின்றனர். உலகத்தின் பக்கம் மட்டுமே கவனம் உள்ளது. அவர்களின் மார்க்கம் பழைமையானதாக ஆகி விட்ட காரணத்தால் மார்க்கத்தை விட்டு விலகி விட்டனர். அவர்களுக்கு அல்லாஹ்வின் வழிகாட்டல் இல்லை. எனவே, இது தொடர்பாக சிந்திக்கவும் முடியாது. நமது மார்க்கத்தில் நமக்கு திருக்குர்ஆன் வேதமாக உள்ளது. மேலும் அது எப்போதைக்கும் அறிவு மற்றும் ஞானத்தால் நிரப்பிய வேதமாகும். திருக்குர்ஆனை சிந்திப்பது இறையச்சத்தில் முன்னேற்றுகிறது. அல்லாஹ்வின் படைப்பின் பக்கம் கவனமூட்டுகிறது. மனிதன் தக்வாவில் முன்னேறும் போது பிறகு இறைவனைக் காண்கின்றான். அதாவது, தக்வா இறைவனைக் காட்டுகிறது. அல்லாஹ்வின் இருப்பு இறையச்சம் உடையவர்களுக்கு சிந்திக்கக் கூடியவர்களுக்கு மலைகளின் உச்சியிலும் தென்படுகிறது. ஆழமான பள்ளத்தாக்குகளிலும் தென்படுகிறது. அல்லாஹ்வின் இருப்பு நதிகளிலும் தென்படுகிறது. கடலிலும் தென்படுகிறது. சந்திரன் மற்றும் நட்சத்திரங்களிலும் தென்படுகிறது. பல்வேறு கோள்களிலும் தென்படுகிறது. ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவர் வெறும் அறிவு மற்றும் லாஜிக்கின் அடிப்படையில் நடப்பதில்லை. மாறாக, அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்தி அல்லாஹ்விடம் இருந்து ஒளியைப் பெறுகிறார். எனவே, நோன்வில் இந்த ஒளியையும் தேட வேண்டும். ரமலானுடைய நோக்கம் பௌதீக விஷயங்களைக் குறைத்துக் கொண்டு பௌதீக உணர்வை குறைத்துக் கொண்டு ஆன்மீகமான

விஷயங்களைத் தேடுவதாகும். இதிலும் நாம் முன்னேற முயற்சி செய்ய வேண்டும். தமது ஆன்மாவைத் தூய்மைப்படுத்த வேண்டும். மேலும் தனது ஆற்றல்களை தூய்மைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

தமது ஆற்றல்களை சரியாகப் பயன்படுத்த வேண்டுமானால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: அவற்றை தூய்மைப்படுத்துங்கள். இதுவே அல்லாஹ் நம்மிடமிருந்து எதிர்பார்க்கின்ற தக்வா ஆகும்.

பிறகு, ஜமாஅத்தில் இணைந்துள்ளீர்கள் எனில், இஸ்லாத்திற்குத் தொண்டாற்ற விரும்புகிறீர்கள் எனில் பிறகு நிங்கள் இறையச்சம் மற்றும் தூய்மையை மேற்கொள்ளுங்கள். இஸ்லாத்திற்கு சேவை செய்வது வெறும் பேச்சுக்களால் மட்டும் முடியாது. இறையச்சம் மற்றும் தூய்மையை மேற்கொள்ள வேண்டியது வரும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "இப்போது நான் மீண்டும் கவனமூட்டுகிறேன். அதாவது இதற்கு முன் கூறப்பட்டதன் பக்கம் திரும்புகிறேன். அதாவது, صَابِرُوْا وَرَابِطُوْا என்பதற்கு ஏற்ப எதிரிகளுக்கு எதிரில் அவர்கள் எல்லையைக் கடக்காமல் இருப்பதற்காக அவர்களுக்கு எதிரில் குதிரைகள் இருப்பது அவசியமானது போன்று நீங்களும் தயாராக இருங்கள்." وَرَابِطُوْا என்ற வசனத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "எல்லைகளில் குதிரைகள் நிறுத்தப்படுகின்றன. பாதுகாப்பிற்காக படைகள் நிறுத்தப்படுகின்றன. எதிரிகள் உங்களுடைய எல்லைக்குள் நுழைந்து விடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: "இதே போல் படைகளைப் போன்று நீங்களும் தயாராக நில்லுங்கள். எதிரி எல்லையைக் கடந்து இஸ்லாத்திற்கு இழப்பை ஏற்படுத்தி விடக்கூடாது."

அவர்கள் கூறினார்கள்: நான் இதற்கு முன்னரும் கூறியுள்ளேன். நீங்கள் இஸ்லாத்திற்கு உதவ விரும்பினால் முதலில் நீங்கள் இறையச்சத்தையும், தூய்மையையும் உருவாக்குங்கள். அதனால் நீங்கள் இறைவனின் அடைக்கலத்தின் பாதுகாப்பான கோட்டைக்குள் வர இயல வேண்டும். பிறகு இந்த தொண்டிற்கான வாய்ப்பு கிடைக்க வேண்டும். அல்லாஹ்வின் அடைக்கலத்தற்குள் வந்து விட்டால் இந்த தொண்டாற்றுவதற்கான அதாவது இஸ்லாத்தைப் பாதுகாக்கக்கூடிய அதற்கு தொண்டாற்றுவதற்கான வாய்ப்பும் கிடைக்கும். உங்களுடைய உரிமையும் நிலைநாட்டப்படும். ஏனென்றால், நீங்கள் உங்களை சீர்திருத்தினீர்கள். தக்வாவில் நிலை பெற்றீர்கள்.

அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் பார்க்கிறீர்கள். முஸ்லிம்களின் வெளி ஆற்றல்கள் எவ்வாறு பலவீனமடைந்து விட்டது. சமுதாயங்கள் அவர்களை இழிவான பார்வையுடன் பார்க்கின்றன. உங்களுடைய அக மற்றும் உள்ளத்தின் ஆற்றலும் பலவீனமடைந்து விட்டால் பிறகு முடிவு நாள் என்றே கருதுங்கள். பரிசுத்த ஆற்றல் உங்களில் நுழையும் வண்ணம் உங்களை தூய்மைப்படுத்துங்கள். அது எல்லையிலுள்ள குதிரைகளைப் போன்று பாதுகாக்கக் கூடியவையாக ஆகி விட வேண்டும். அல்லாஹ்வின் அருள் எப்போதும் இறையச்சம் உடையவர்கள் மற்றும் தூயவர்களுடன் தான் இருந்து வருகிறது. இஸ்லாத்தின் மீது கறை படும் வகையில் உங்களது செயலை வைக்காதீர்கள். தீயவர்கள் மற்றும் இஸ்லாத்தின் போதனைகளின்படி நடக்காத முஸ்லிம்களின் செயலால் இஸ்லாத்தின் மீது கறை படிகிறது. ஒரு முஸ்லிம் மது அருந்தி விட்டு வாந்தி எடுத்துக் கொண்டு திரிகிறார்; தலைப்பாகை கழுத்தில் கிடக்கும்; அசுத்தமான சாக்கடைகளில் விழுந்து கிடக்கிறார்; போலீஸின் காலனிகள் அவர் மீது விழுகின்றது. இந்துக்களும் கிறித்தவர்களும் சிரிக்கின்றனர். இவருடைய இதுபோன்ற ஷரீஅத்திற்கு மாற்றமான செயல் அவரது இழிவிற்கு மட்டும் காரணாக இருப்பதில்லை. மாறாக, அதன் தாக்கம் இஸ்லாத்தின் மீது ஏற்படுகிறது." இஸ்லாம் அவப்பெயருக்கு உள்ளாகிறது. இன்றைய நாட்களில் ஒரு குறிப்பிட்ட அமைப்புகளாக இருந்தாலும் சில தீவிரவாத அமைப்புகளாக இருந்தாலும் அது சில மனிதர்கள்தான் சில அமைப்புகள் தான் என்று யாரும் கூறுவதில்லை. இஸ்லாம் அவப்பெயருக்கு உள்ளாக்கப்படுகிறது. இஸ்லாத்தின் போதனை இவ்வாறாகும் என இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யப்படுகிறது. இஸ்லாத்தைச் சார்ந்தவன் என்று கூறக் கூடியவரின் செயல் எதிரிகளுக்கு இஸ்லாத்தின் மீது விரல் தூக்குவதற்கான வாய்ப்பை வழங்கி விடுகிறது.

அவர்கள் கூறினார்கள்: "எனது இதுபோன்ற செய்திகள் அல்லது சிறைச் சாலைகளின் அறிக்கைகளைப் படித்து அதிக துக்கம் ஏற்படுகிறது. முஸ்லிம்கள் இந்த அளவு தீய நடத்தைகளின் காரணமாக அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் காணும் போது உள்ளம் நிம்மதியிழந்து விடுகிறது. ஸிராத்தல் முஸ்தகீம் அதாவது நேரான பாதையை உடைய இம்மக்கள் தமது தீய நடத்தையின் காரணமாக தனக்கு மட்டும் இழப்பை ஏற்படுத்தவில்லை. மாறாக, இஸ்லாத்தை ஏளனத்திற்குள்ளாக்குகின்றனர்."

அவர்கள் கூறினார்கள்: "முஸ்லிம்கள் முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு இதுபோன்ற தடுக்கப்பட்டவைகளில் மூழ்குகின்றனர். இது அவர்களுக்கு மட்டுமின்றி இஸ்லாத்திற்கும் கஷ்டத்தை ஏற்படுத்துகின்றது. எனவே உங்களுடைய நடத்தையை நிரகாரிப்பாளர்களுக்கும் ஆட்சேபனை செய்பவர்களுக்கும் வாய்ப்பு கொடுக்காத வண்ணம் ஆக்கிக் கொள்ளுங்கள்."

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 77-78; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு, தக்வாவின் வகைகள் பற்றி விவரித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "தக்வாவின் பல வகைகள் உள்ளன. அகங்காரம், ஆணவன் போன்றவை உள்ளன. சுயநலன் உள்ளது. தம்மைத் தாமே புகழ்தல், பிறகு ஹராமான செல்வம் உள்ளது." பிறகு கூறினார்கள்: "ஆணவம், சுயநலம், ஹராமான செல்வத்திலிருந்து தவிர்ந்திருத்தல், மேலும் தீய ஒழுக்கங்களிலிருந்து தவிர்ந்திருப்பதும் தக்வா ஆகும். எவர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவாரோ அவருடைய எதிரிகளும் நண்பர்களாகி விடுகின்றனர்."

அல்லாஹ் கூறுகின்றான்: "اِدْفَعْ بِالَّتِیْ ھِیَ اَحْسَنُ" இப்போது இந்த வழிகாட்டல் என்ன போதனையை வழங்குகிறது என்று எண்ணிப் பாருங்கள். இந்த வழிகாட்டலில் அல்லாஹ் விரும்புவது என்னவென்றால் எதிரி ஏசிப் பேசினாலும் கூட அதற்கு பதிலாக ஏசிப்பேச வேண்டாம். மாறாக, பொறுமை காட்டவேண்டும். அதன் விளைவாக எதிரி உங்களுடைய நல்லொழுக்கத்தைப் பார்த்து தாமே வெட்கப்பட்டு விடுவார். இது பழிவாங்குதல் என்ற ரீதியில் நீங்கள் கொடுக்கும் தண்டனையை விட மேலானதாக இருக்கும்."

அவர்கள் கூறினார்கள்: "ஒரு மனிதர் கொலை செய்யும் அளவிற்கு உங்களைத் தூண்ட முடியும். ஆனால், மனிதநேயம் மற்றும் தக்வாவின் எதிர்ப்பார்ப்பு இதுவல்ல. நல்லொழுக்கம் எப்படிப்பட்ட ஒன்றென்றால், தீய மனிதனிடம் மீது கூட அதன் தாக்கம் ஏற்படும். ஒரு ஃபார்ஸி கவிதையில் எவ்வளவு அழகாக ஒருவர் கூறியுள்ளார்? அந்தக் கவிதையின் பொருள் என்னவென்றால், நல்ல முறையில் நடந்து கொண்டால் அந்நியர்களான எதிரிகள் கூட உங்களது வேண்டப்பட்டவர்களின் வட்டத்திற்குள் வந்து விடுவார்."

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 81; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

மனிதன் நற்செயல் மற்றும் தக்வாவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் கூறினார்கள்: "சிந்திக்க வேண்டிய அசல் விஷயம் என்னவென்றால், மனிதன் நல்லொழுக்கம் மற்றும் தக்வாவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் உண்மையாளர்களின் வழியை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஏதாவது நடக்கும். اِنَّ اللّٰہَ لَا یُغَیِّرُ مَا بِقَوْمٍ حَتّٰی یُغَیِّرُوْا مَا بِاَنْفُسِہِمْ தாமே தமது நிலைமையை மாற்றிக் கொள்ளாதவரை இறைவன் எந்த சமுதாயத்தின் நிலையையும் மாற்றுவதில்லை. தேவையில்லாமல் தவறான எண்ணம் கொண்டு, மேலும் விஷயத்தை எல்லை கடக்கச் செய்வது முற்றிலும் வீணான காரியமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக முக்கியமான விஷயம் என்னவென்றால், மக்கள் இறைவனின் பக்கம் திரும்ப வேண்டும்; தொழ வேண்டும்; ஸக்காத் வழங்க வேண்டும். தீய நடத்தையிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும்." பிறரின் உரிமைகளைப் பறிப்பதிலிருந்தும் தீய மற்றும் தவறான அசுத்தமான காரியங்களில் ஈடுபடுவதிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும்.

அவர்கள் கூறினார்கள்: "இந்த விஷயம் முற்றிலும் நிரூபணமான ஒன்றாகும். அதாவது, ஒரு மனிதர் தீய காரியம் செய்தால் அது முழு வீடு மற்றும் முழு நகரத்தின் அழிவிற்கும் காரணமாகி விடுகிறது." எனவே, தீமைகளை விட்டு விடுங்கள். ஏனென்றால், அது அழிவிற்குக் காரணமானவைகளாகும். உங்களுடைய அண்டை வீட்டார் தவறான எண்ணம் கொள்கிறார் என்றால், அந்த தவறான எண்ணத்தைக் களைய முயற்சி செய்யுங்கள். அவருக்குப் புரிய வையுங்கள். மனிதன் எதுவரை இது குறித்து கவனமற்றிருப்பான்?

அவர்கள் கூறினார்கள்: "ஹதீஸில் வருகிறது. துக்கம் வருவதற்கு முன் செய்யப்படக்கூடிய துஆக்களே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அச்சத்திலும், அபாயத்திலும் மூழ்கிய பிறகு அனைவருமே துஆ மற்றும் இறைவன் பக்கம் குனிய முடியும். அமைதியாக இருக்கும் வேளையில் துஆ செய்வதே நற்பேறாகும்."

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 262-263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இதன்பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: "அசல் விஷயம் என்னவென்றால், தக்வாவின் நல்ல தாக்கம் மற்றவரின் மீதும் படுகிறது. மேலும், இறைவன் இறையச்சம் உடையவர்களைக் கை விட்டு விடுவதில்லை. ஒரு புத்தகத்தில் படித்தேன். ஹஸ்ரத் ஸய்யிது அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் சான்றோரில் ஒருவராக இருந்தார்கள். அவர்களின் ஆன்மா மிகவும் தூய்மையானதாக இருந்தது. ஒருமுறை அவர்கள் தனது தாயிடம் எனது உள்ளம் உலகத்தை விட்டு விலகியதாக உள்ளது. நிம்மதிக்கான வழிகளைக் காட்டக் கூடிய ஏதேனும் வழிகாட்டியைத் தேடவேண்டும் என நான் விரும்புகிறேன் என்று கூறினார்கள். இப்போது இவர் நமது வேலைக்கு சரிபட்டு வரமாட்டார் என்பதைக் கண்டதால் அவர்கள் கூறியதை அன்னாரது தாயார் ஏற்றுக் கொண்டார்கள். அவரது தாயார் சரி, நான் உனக்கு விடை கொடுக்கிறேன் என்று கூறி உள்ளே சென்று அவர் சேர்த்து வைத்திருந்த 80 நாணயங்களைக் கொண்டு வந்து (ஷரீஅத்தின்) பங்கின் அடிப்படையில் 40 நாணயங்கள் உன்னுடையதாகும். 40 நாணங்கள் உன்னுடைய மூத்த சகோரருடையதாகும் என்றார்கள். எனவே, உன்னுடைய பங்கான 40 நாணயங்களை உனக்கு தருகிறேன் என்று கூறி அதை அன்னாரின் கைகளுக்கு கீழ் அவர்கள் அணிந்திருந்த ஆடையோடு வைத்து தைத்து விட்டார்கள். மேலும் நீ அமைதியான இடத்திற்குச் சென்று இதை எடுத்துக் கொள். உன்னுடைய தேவைக்கேற்ப இதை செலவழித்துக் கொள் என்று கூறினார்கள். ஸய்யிது அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் தனது தாயாரிடம் நான் பயணத்தில் செல்கிறேன். எனக்கு ஏதேனும் அறிவுரை கூறுங்கள் எனக் கேட்டார்கள். அப்போது அவர், மகனே! ஒருபோதும் பொய் கூற வேண்டாம். இது எனது

அறிவுரையாகும். எப்போதும் இதை நினைவில் வை. இதனால் மிகப்பெரும் பரக்கத் கிடைக்கும் என்று கூறினார். இதைக் கேட்டு விட்டு அவர்கள் விடை பெற்றுச் சென்றார்கள்.

எதிர்பாராத விதமாக எந்தக் காட்டைக் கடந்து சென்றார்களோ அங்கு பயணிகளிடம் கொள்ளையடிக்கக்கூடிய திருடர்கள் இருந்தனர். தூரத்திலிருந்து ஸய்யிது அப்துல் காதிர் ஜீலானி சாஹிபின் மீது அவர்களின் பார்வை பட்டது. அருகே வந்ததும் அவர்களது தோற்றம் கம்பளியைப் போர்த்திய ஒரு யாசிப்பவரைப் போன்று தெரிந்தது. ஒருவர் உன்னிடம் ஏதேனும் இருக்கிறதா? என்று வினவினார். அவர்கள் அப்போது தான் தாயாரிடமிருந்து பொய் கூற வேண்டாம் என்ற அறிவுரையைக் கேட்டு வந்திருந்தார்கள். அதனால் உடனடியாக 40 நாணயங்கள் என்று கையின் கீழ் உள்ளது எனப் பதிலளித்தார்கள். இதை எனது தாயார் பையைப் போன்று வைத்து தைத்துள்ளார்கள் என்றார்கள். அந்தத் திருடன் இவர் கேலி செய்கிறார் எனக் கருதினான். அடுத்த திருடன் கேட்ட போதும் இதே பதிலையே கூறினார்கள். சுருக்கமாக, எல்லா திருடர்களுக்கும் இதே பதிலையே கூறினார்கள். அவர்கள் இவர்களை தனது கொள்ளைக் கூட்டத் தலைவரிடம் அழைத்துச் சென்றனர். இவர் மீண்டும் மீண்டும் என்னிடம் இவ்வளவு நாணயங்கள் உள்ளது எனக் கூறுகிறார் என்று தலைவனிடம் கூறினார். அதற்கு தலைவன் அப்படி என்றால் அவருடைய ஆடையைப் பாருங்கள் எனக் கூறினான். சோதனை செய்யப்பட்ட போது உண்மையிலேயே 40 நாணயங்கள் கிடைத்தன. அவர்கள் வியப்பிற்குள்ளாயினர். இவர் மிகவும் வித்தியாசமானவாக இருக்கிறார். நாம் இதற்கு முன்னர் இப்படி ஒரு நபரை கண்டதில்லையே என வியந்தனர். அந்தத் தலைவன் அன்னாரிடம் என்ன காரணத்தினால் நீ உன்னுடைய பணத்தைப் பற்றி எங்களுக்கு கூறினாய்? என்று கேட்டான். அதற்கு அன்னார், நான் இறைவனுடைய மார்க்கத்தைத் தேடி செல்கிறேன். நான் புறப்படும் போது எனது தாய் ஒருபோதும் பொய் கூறக் கூடாது என அறிவுரை வழங்கினார்கள். இது எனக்கு முதல் சோதனையாகும். நான் எவ்வாறு பொய் கூறுவேன் என்று கூறினார்கள். இதைக் கேட்ட கொள்ளைக் கூட்டத் தலைவன் அழத் தொடங்கினான். அந்தோ! நான் ஒருமுறை கூட இறைவனின் கட்டளையைக் கேட்கவில்லையே என்று கூறி திருடர்களைப் பார்த்து இந்த வார்த்தை மற்றும் இந்த மனிதரின் நிலைப்பாடு என்னையே முடித்து விட்டது. இனி நான் உங்களோடு இருக்க முடியாது. நான் பாவமன்னிப்புக் கோடுகிறேன் என்றான். அத்தோடு மற்ற திருடர்களும் பாவமன்னிப்புக் கோரினர். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 35; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, இந்த விஷயம் நம்மையும் நம்மை ஆராய்வதன் பக்கம் கவனமூட்டுகிறது. நாமும் மார்க்கம் சீர்கெட்டுப் போய் விட்டது. இஸ்லாத்தின் சரியான போதனைகளின்படி யாரும் நடக்கவில்லை என்ற காரணத்தால் தான் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்கிறோம். இஸ்லாத்தின் சரியான போதனைகளின்படி நடக்க வேண்டும் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்க வேண்டும் என்பதால் தான் நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அதற்குப் பிறகு நாம் நமது தீமைகளை விட்டு விட்டோமா? பொய் எப்படிப்பட்ட ஒரு தீமை என்றால் வெளிப்படையாகச் சிறியதாகத் தோன்றுகிறது. ஆனால் அது மிகப்பெரிய தீமையாகும். இந்த சம்பவத்தை வைத்து அதன் அடிப்படையில் நம்மை பரிசீலித்தால் அநேகமாக பெரும்பாலார் இந்தத் தீமையில் மூழ்கி இருப்பார்கள். எனவே, பைஅத் மற்றும் தக்வாவின் எதிர்பார்ப்பு என்னவென்றால், நாம் இந்தத் தீமையிலிருந்து விலக வேண்டும்.

இங்கு இந்த நாடுகளில் வந்தவர்களில் பெரும்பாலர் ஏன் வந்துள்ளனர் என்றால், மார்க்கத்தின் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி இருக்கின்றனர். தனது நாட்டில் தனது மார்க்கத்தின்படி செயல்பட அவர்களுக்கு அனுமதி இருக்கவில்லை. சுதந்திரமாக தனது மார்க்கத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் இருக்கவில்லை. குறிப்பாக இந்த மேற்கத்திய நாடுகளில் இருக்கக் கூடியவர்களான நாம் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். சிறிய செயல் மற்றும் சொல்லிலிருந்து சிறிதளவு கூட இது பொய்யாகும் என்பது வெளிப்படாதவாறு நமது சொல் செயல் இருக்க வேண்டும் அல்லது தவறான விஷயங்களைக் கூறி நாம் பயனடைகிறோம் என்பது இருக்கக் கூடாது. தக்வாவை முன்னிறுத்தியவாறு ஒவ்வொருவரும் தன்னை ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவை உள்ளது.

பிறகு இறைவனால் வழங்கப்பட்ட ஆற்றல்களை எவ்வாறு நீதியுடன் செலவிட முடியும் என்பதைப் பற்றியும் அதனை பயன்படுத்துவதன் மூலமே மனித ஆற்றல்கள் வளர்ச்சி அடைகின்றன என்பது பற்றியும் அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''அல்லாஹ் எந்த அளவு ஆற்றல்கள் வழங்கி இருந்தாலும் அவற்றை வீணாக்குவதற்காக அவன் அதை தரவில்லை. அதனை ஆகுமான முறையில் பயன்படுத்துவதே அதன் வளர்ச்சியாகும்.'' அதனை நீதியுடன் பயன்படுத்துவது மற்றும் அதனை ஆகுமான முறையில் பயன்படுத்துவதே அதன் வளர்ச்சியாகும். அவற்றை அதிகரிக்க வேண்டும் என்றால் அதிலிருந்து பலன் பெற வேண்டும் என்றால் அவைகளை சரியாக வைத்திருக்க வேண்டும் என்றால் அவைகளை ஆகுமான முறையில் பயன்படுத்துவது அவசியமானதாகும்.

அவர்கள் கூறினார்கள்: எனவேதான், ''இஸ்லாத்தில் பாலுணர்வின் ஆற்றல் கண்களை அகற்றி விடுமாறு மற்றும் பிற ஆற்றல்களை விட்டும் முற்றிலும் தவிர்ந்திருக்குமாறு போதனை வழங்கப்படவில்லை. மாறாக, அதனை ஆகுமான முறையில் பயன்படுத்துதல் ஆன்மாவைப் பரிசுத்தமாக்குவதற்காக வைக்கப்–பட்டுள்ளது. அல்லாஹ், قَدْ اَفْلَحَ الْمُؤْمِنُوْن அதாவது, நம்பிக்கையாளர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

பிறகு அவர்கள் கூறினார்கள்: இறையச்சம் உடையவர்களை படம்பிடித்துக் காட்டி அதன் விளைவாக وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ அதாவது அவர்கள் வெற்றி பெறக்கூடியவர்கள் ஆவர் என்று கூறியுள்ளான். (2:6) அதாவது, இறையச்சத்தில் முன்னேறக் கூடியவர்கள், மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்ளக் கூடியவர்கள், தொழுகை விழும் போது மீண்டும் அதை நிலைநாட்டுவார்கள், இறைவனால் வழங்கப்பட்டவைகளில் இருந்து வழங்குவார்கள். இறை வணக்கம் செய்யும் போது தொழுகையில் பல சிந்தனைகள் வருகின்றன. அப்போது மீண்டும் அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் கவனத்தை திருப்புகின்றனர். அந்த சிந்தனைகளைக் களைகின்றனர் அல்லது சில வேளைகளில் தொழுகைகளின் பக்கம் கவனம் இருப்பதில்லை. அதாவது குறித்த நேரத்தில் தொழ வேண்டும் என்ற கவனம் இருப்பதில்லை. பிறகு தன்னை சீர்திருத்தி தொழுகைகளை குறித்த நேரத்தில் தொழுவதற்கு முயற்சி செய்கின்றர். அப்படிப்பட்டவர்களே வெற்றி பெறக் கூடியவர்கள் ஆவர். அல்லாஹ் வழங்கிய செல்வத்திலிருந்து அவனது வழியில் செலவிடுகின்றனர்.

அவர்கள் கூறினார்கள்: ''ஆன்மாவிற்கான அபாயம் இருந்தும் யோசிக்காமல் கடந்த மற்றும் தற்போதைய இறை வேதத்தின் மீது நம்பிக்கை கொள்கின்றனர். இறுதியில் அவர்கள் நிச்சய உறுதி வரை சென்றடைகின்றனர். அதாவது மறைவானவற்றின் மீது நம்பிக்கை இருக்கும் போது பிறகு அது நிச்சய உறுதியாகவும் ஆகி விடுகினறது. இப்படிப்பட்டவர்களே நேர்வழியில் உள்ளனர். அவர்கள் சரியாக முன்னோக்கிச் செல்கின்ற பாதையில் உள்ளவர்களாவர். இப்படிப்பட்டவர்களே வெற்றி பெறக் கூடியவர்கள் ஆவர். மேலும் குறிக்கோள்களை அடைந்து விடுவர். மேலும் அபாயத்திலிருந்து இரட்சிப்புப் பெறுவார்கள். எனவே ஆரம்பத்திலேயே அல்லாஹ் நமக்கு தக்வாவிற்கான போதனையை வழங்கி எப்படிப்பட்ட வேதத்தை வழங்கியுள்ளான் என்றால், அதில் தக்வா தொடர்பான அறிவுரைகளையும் வழங்கியுள்ளான். எனவே, நமது ஜமாஅத் அவர்களிடம் தக்வா இருக்கிறதா? இல்லையா? என்ற இந்த துக்கத்தை உலக துக்கத்திற்கு மேலாக தன் உயிரின் மீது இட வேண்டும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 35; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு அல்லாஹ்வின் மீது உள்ள அச்சம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஒருவரது சொல்லும் செயலும் எந்த அளவுக்கு ஒத்துப் போகிறது? என்று பார்ப்பதில் தான் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் உள்ளது. என்ன பேசுகிறார்? என்ன அமல் செய்கிறார்? பரஸ்பரம் ஒன்று மற்றொன்றிற்கு ஒத்துப் போகிறதா? அல்லது வெவ்வேறானதாக இருக்கின்றனவா? என்று பார்க்க வேண்டும். எவருடைய சொல்லும் செயலும் ஒன்றாக இல்லை என்று கண்டால் அவர் இறைவனின் கோபத்திற்கு ஆளாகுவார் என்று புரிந்து கொள்ளுங்கள். சொல் எவ்வளவு தூய்மையானதாக இருந்தாலும் உள்ளம் தூய்மையற்றதாக இருக்கும் என்றால் அது இறைவனின் பார்வையில் எவ்வித மதிப்பையும் பெறாது. உள்ளம் அசுத்தமானதாக இருக்கின்றதென்றால், செயல் அதற்கேற்ப இல்லை என்றால் அவர் எந்த அளவு நன்மையான பேச்சுக்களைப் பேசினாலும் அல்லாஹ்வின் பார்வையில் அதற்கு எவ்வித மதிப்பும் இல்லை. மாறாக, இறைவனின் கோபம் வெளிப்படும்.'' அல்லாஹ் அனைவரையும் இதிலிருந்து பாதுகாப்பானாக!

அவர்கள் கூறினார்கள்: ''எனவே, எனது ஜமாஅத் புரிந்து கொள்ளட்டும்! விதை விதைக்கப்பட வேண்டும். அதன் மூலம் கனிகள் நிரம்பிய மரமாக வேண்டும் என்பதற்காகவே என்னிடம் அவர்கள் வந்துள்ளனர். எனவே, ஒவ்வொருவரும் அவருடைய அகம் எவ்வாறு உள்ளது? என்று ஆராய வேண்டும். நமது ஜமாஅத்தும் அதன் நாவில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றுமாக கொண்டுள்ளது என்றால் (அல்லாஹ் அவ்வாறு செய்யாமல் இருப்பானாக) முடிவு சிறந்ததாக இருக்காது. ஒரு ஜமாஅத் உள்ளத்தால் காலியாக இருக்கிறது. மேலும் வெறும் வாய் வாதங்கள் செய்கிறது என்று அல்லாஹ் கண்டால் அவன் அதை தேவைகளற்றவனாக இருக்கிறான். அவன் பொருட்படுத்துவதில்லை. பத்ர் போரில் வெற்றி கிடைக்கும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது. எல்லா வகையிலும் வெற்றிக்கான நம்பிக்கை இருந்தது. அல்லாஹ் வெற்றியை தருவேன் என்று முன்னறிவித்திருந்தான். பிறகும் கூட ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் அழுதழுது துஆ செய்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள், எல்லா வகையிலும் வெற்றிக்கான வாக்குறுதி இருக்கும்போது இந்த அளவு உருக்கத்திற்கான காரணம் என்ன? எனக் கேட்டார்கள். ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள், அவன் தேவைகளிலிருந்து தன்னிறைவு பெற்றவனாவான். இறை வாக்குறுதியில் ஏதேனும் மறைவான நிபந்தனைகள் இருக்கலாம் என்று கூறினார்கள்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 11; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, இது நமக்கும் மிகவும் அஞ்சத்தகுந்த இடமாகும். சந்தேகமின்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமும் அல்லாஹ் முன்னேற்றத்திற்கான வாக்குதியை வழங்கியுள்ளான். வெற்றிக்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான். ஆனால், நாம் அதன் அங்கமாக ஆவதற்கு நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவை உள்ளது.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நமது ஜமாஅத்திற்கு குறிப்பாக இறையச்சத்தின் தேவை உள்ளது. அவர்கள் எப்படிப்பட்ட

ஒரு நபரோடு தொடர்பு கொண்டுள்ளனர் எனில், எவருடைய ஜமாஅத்தில் பைஅத் செய்துள்ளனர் எனில் அவர்தான் இறைவன் புறமிருந்து வந்துள்ளதாக வாதம் செய்துள்ளார் என்ற எண்ணம் குறிப்பாக தேவையாகும். அவர்கள் எந்த வகையான காழ்ப்புணர்ச்சி அல்லது இணை வைத்தலில் மூழ்கி இருந்தார்களோ அந்த அனைத்து அபாயத்திலிருந்தும் அவர்கள் இரட்சிப்பு பெற வேண்டும்.'' பழைய நோய்கள் இருந்தன. ஆனால், நீங்கள் எப்படிப்பட்ட மனிதரைச் சார்ந்தவர்களாக ஆகி விட்டீர்கள் என்றால் அவர் இறைவன் புறமிருந்து வந்தவராக வாதம் செய்துள்ளார். இவைகளிலிருந்தும் துக்கங்களிலிருந்தும் இரட்சிப்பு பெற வேண்டும் என்பதற்காக அன்னாரோடு தொடர்பு கொண்டுள்ளோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நீங்கள் அறிவீர்களா? ஒருவர் நோய்வாய்ப்பட்டு விட்டால் அவருடைய நோய் சிறியதாக இருந்தாலோ அல்லது பெரியதாக இருந்தாலோ அந்த நோயிற்காக சிகிச்சை எடுக்கவில்லை எனில் சிகிச்சைக்காக கஷ்டத்தை மேற்கொள்ளவில்லை எனில் நோய் குணமாக முடியாது. முகத்தில் ஒரு கரும்புள்ளி வந்தால் அது பெரிதாகி பெரிதாக முழு முகத்தையும் கருப்பாக்கி விட்டால் பெரும் கவலை ஏற்படுகிறது. இதேபோன்று பாவத்திற்கும் ஒரு கறை உள்ளது. ஒரு கருப்பு கறை உள்ளத்தில் ஏற்படுகிறது.'' தனது பலவீனங்கள் மற்றும் பாவத்தின் ஒரு கருப்பு கறை உள்ளத்தில் ஏற்படுகிறது.

அவர்கள் கூறினார்கள்: ''சின்னச் சின்ன பாவங்கள் என்று மனிதன் கருதினால் அதை பொருட்படுத்தவில்லை என்றால் அதை சரி செய்வதில் சோம்பேறித்தனம் காட்டினால் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி முழுமையாக செயல்படவில்லை என்றால், அதிலிருந்து தப்பிப்பதற்கு இறையச்சத்தை மேற்கொள்ளவில்லை என்றால் பிறகு இந்த சோம்பேறித்தனம் பெரும் பாவமாகி விடுகின்றது.''

அவர்கள் கூறினார்கள்: ''சிறிய பாவங்கள் சிறியதாக இருக்கக் கூடிய கரும்புள்ளிகளைப் போன்றதாகும். அது பெரியதாகி இறுதியில் முழு முகத்தையும் கருப்பாக்கி விடுகின்றன.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 10; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இந்த சிறிய பாவங்கள் தான் பெரும் பாவங்களாகி மனிதனை கருப்பாக்கி விடுகின்றன. அல்லாஹ் நம்மை ரமலானின் இந்த குறிப்பான சூழலில் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப தக்வாவை மேற்கொள்ளக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக! மேலும் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தின் எல்லா வகையான தீமைகளிலிருந்தும் தப்பிப்பவர்களாகவும், இறைவனின் விருப்பதைப் பெறுவதற்கு தனது எல்லா செயல்களையும் அதற்கேற்ப அமைத்துக் கொள்ளும் உறுப்பினர்களாக நம்மை ஆக்குவானாக! மேலும் இந்த மாதத்திலிருந்து எப்படி தூய்மையாக வெளி வர வேண்டும் என்றால் நன்மையில் நிலைபெற வேண்டும் என்றால் நம்மிடமிருந்து விடுபட்ட தீமைகள் மீண்டும் நம்மிடம் வந்து விடக்கூடாது. அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸாவும் தொழ வைப்பேன். ஒன்று, ஹாஸிர் ஜனாஸா ஆகும். மதிப்பிற்குரிய மர்ஹூம் அப்துல் ஹமீது சாஹிப் உடைய மனைவி தாஹிரா ஹமீது உடையதாகும். யூ.கே. –வில் இருந்தார்கள். ஒரு நீண்ட காலம் நோயுற்றிருந்து ஜுன் 8 –ஆம் தேதி அன்று தமது 60 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ இவர்கள் பாகிஸ்தானின் ஜெஹ்லமைச் சார்ந்தவராவார். 2001 –ஆம் ஆண்டு யூ.கே. வந்தார்கள். நல்ல பெண்மணி ஆவார்கள். தொழுகைகளை பேணக் கூடியவராகவும், கிலாஃபத்தோடு நல்ல தொடர்பு உடையவராகவும் இருந்தார்கள். குழந்தைகளுக்கும் சரியான முறையில் தர்பிய்யத் வழங்கினார்கள். ஜமாஅத்தோடு இணைத்து வைத்தார்கள். குறிப்பாக தொழுகைகளைக் கருத்தில் கொள்ளக் கூடியவராக இருந்தார்கள். இறைவனது அருளால் வஸிய்யத் செய்தவராகவும் இருந்தார்கள். அவர் தனக்குப் பின்னால் விட்டுச் சென்றவர்களில் இவருடைய தாயாரைத் தவிர ஒரு மகனும் ஐந்து மகளும் உள்ளனர். அல்லாஹ் இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! பின் விட்டுச் சென்றவர்களுக்கும் பொறுமையை வழங்குவானாக!

இரண்டாவது காயிப் ஜனாஸா ஆகும். இது மதிப்பிற்குரிய ஷரீஃப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகன் மதிப்பிற்குரிய ஹமீது அஹ்மது ஷஹீது உடையதாகும். இவருடைய வயது 63 ஆகும். அட்டக்கில் வசித்து வந்தார்கள். அஹ்மதிய்யத்தின் எதிரிகள் ஜுன் 7 –ஆம் தேதி மதியம் 2.30 மணி அளவில் வீட்டிற்கு வெளியே துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ விபரங்களின் அடிப்படையில் 4 ஜுன் அன்று மதிப்பிற்குரிய ஹமீது சாஹிப் ளுஹர் தொழுது விட்டு பள்ளிவாயிலிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்தார்கள். வீட்டிற்கு வெளியே நின்று மோட்டார் சைக்கிளின் ஹாரனை அடித்தார்கள். அவர்களின் மகன் கதவை திறப்பதற்கு வந்து கொண்டிருந்தபோது ஹமீது சாஹிபை மிகவும் அருகில் இருந்தவாறு சுட்டு விட்டு சம்பவம் நடந்த இடத்தை விட்டு ஓடி விட்டனர். ஹமீது சாஹிபின் முகத்தின் வலதுப் பக்கத்தில் ஒரு குண்டு பட்டு தலையின் பின்பக்கம் வழியாக வெளியேறியது. குண்டு பட்டதன் காரணமாக ஹமீது சாஹிப் சம்பவ இடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவரது குடும்பத்தில் இவரது தந்தைவழிப் பாட்டனாரான குஜ்ரான்வாலா மாவட்டத்திலுள்ள லஹூரிவாலாவைச் சார்ந்த மியான் முஹம்மது அலி சாஹிப் மூலம் அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் 1923 –ல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் அருளுக்குரிய கரங்களில் பைஅத் செய்தார்கள். ஷஹீது மர்ஹூம் 1953 –ஆம் ஆண்டு மே 15 –ஆம் நாள் குஜ்ரான்வாலா மாவட்டத்தின் லஹூரிவாலாவில் பிறந்தார்கள். பிறகு F.A வரை அங்கேயே கல்வி கற்றார்கள். பிறகு அட்டக்கில் ஸன்ஞ்ச்வால் ஃபேக்டரியில் பணியில் சேர்ந்தார்கள். பணியாற்றிக் கொண்டிருக்கும் போது ஷஹீது பட்டப்படிப்பையும் முடித்தார்கள். அத்துடன் BHMS கோர்ஸும் படித்தார்கள். ஹோமியோபதியின் Practise –ம் செய்து வந்தார்கள். 26 ஆண்டுகள் பணி செய்த பிறகு ஷஹீது மர்ஹூம் பணி நிறைவு வாங்கி விட்டார்கள். பிறகு அட்டக் நகரில் ஹோமியோபதி கிளினிக் திறந்தார்கள். 1982 –ல் மர்ஹூமின் திருமணம் மதிப்பிற்குரிய பஷீர் அஹ்மது சாஹிபின் மகள் மதிப்பிற்குரிய அமத்துல் கரீம் சாஹிபாவுடன் நடந்தது. இவர்கள் ரப்வாவில் இருந்தார்கள். இவர்களும் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமா அட்டக்கின் அரசாங்க கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார்கள். ஷஹீது மர்ஹூம் எண்ணற்ற சிறப்பம்சங்களுக்கு சொந்தக்காரர் ஆவார்கள். தஃவத்தே இலல்லாஹ், விருந்து உபசரிப்பு, ஏழைகளுக்கு உதவுதல், பொறுப்பாளர்களுக்கு கட்டுப்படுதல் ஆகியவை இவர்களது குறிப்பிடத்தக்க சிறப்புகளாகும். துடிப்பான தாயி இலல்லாஹ்வாக இருந்தார்கள். கட்டாயச் சந்தாவை வழங்குவதுடன் எல்லா சந்தாக்கிளிலும் அதிகமாக பங்கெடுத்து வந்தார்கள். ஸன்ஞ்ச்வால் ஃபேக்டரியில் பணியாற்றி வந்த காலத்தில் ஒரு நண்பரை பைஅத் செய்ய வைத்தார்கள். பிறகு அவரின் முழு குடும்பமும் ஜமாஅத்தில் பைஅத் செய்து விட்டது. இதேபோன்று ஒரு குடும்பத்தில் 9 பேர் பைஅத் செய்தனர். பிறகு தொழிற்சாலையிலும் எதிர்ப்பு கிளம்பி விட்டது. ஷஹீது மர்ஹூம் அரசாங்க தரப்பிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த Quarters –ல் வசித்து வந்தார்கள். எதிரிகள் இவர்களது வீட்டில் கல்லையும் எறிந்தனர். இறுதியில் தொழிற்சாலையின் ஏற்பாட்டாளர்கள் ஹமீது சாஹிப் மற்றும் புதிதாக பைஅத் செய்திருந்த அந்த நண்பரையும் ஸன்ஞ்ச்வால் ஃபேக்டரியிலிருந்து ராவல்பிண்டியிலுள்ள தொழிற்சாலைக்கு இடமாற்றம் செய்தனர். ஷஹீது மர்ஹூமிற்கு சில காலமாக எதிர்ப்பு அதிகமாக இருந்தது. 2015 –ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு தீயவன் அட்டக் பள்ளியிலும் இவர்களது கிளினிக்கிலும் தீ வைக்க முயற்சி செய்தான். காவலாளி சரியான நேரத்தில் வந்ததால் அவன் ஓடி விட்டான். இந்த சம்பவத்திற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு அவன் மீண்டும் இவர்களது கிளினிக்கிற்கு தீ வைக்க முயற்சி செய்தான். சம்பவ இடத்தில் பிடிபட்டு விட்டான். பிறகு காவல்துறையினர் வசம் ஒப்படைக்கப்பட்டான்.

இவர்களது மகன் நவீத் அஹ்மது சாஹிப் இங்கு உள்ளார்கள். தந்தையின் ஜனாஸாவிற்குச் செல்ல முடியவில்லை. இவர் கூறுகின்றார்கள்: எனது தந்தை கிலாஃபத்திற்கு கட்டுப்படக்கூடியவராக இருந்தார்கள். மிகவும் துணிச்சல் மிக்கவராகவும் இருந்தார்கள். தஃவத்தே இலல்லாஹ் செய்யக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். ஐவேளை தொழுகைகளைத் தாமும் தொழுதார்கள். எங்களுக்கும் தொழுமாறு அறிவுறுத்துவார்கள். தினமும் திருக்குர்ஆன் ஓதுவார்கள். எங்களையும் ஓதுமாறு கூறுவார்கள். இவரும் பலமுறை ஜல்ஸாவிற்கு வந்துள்ளார்கள். எப்போதும் ஃபஸ்ல் பள்ளிவாயிலுக்கு வந்து ஜமாஅத்தாகத் தொழ வேண்டும் என்று முயற்சி செய்து வருவார்கள்.

இவர்களது இளைய மகள் சல்மா நஸ்ஹத் கூறுகின்றார்கள்: தந்தையார் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்கள் ஆவார்கள். எல்லா திட்டங்களுக்கும் செவிசாய்ப்பார்கள். ஷஹீது ஆவதற்கு ஒரு வாரம் முன்பு கூட மகளே! வாழ்க்கைக்கு எவ்வித உத்திரவாதமும் இல்லை என்று கூறினார்கள். அத்துடன் நன்மை செய்யுமாறு அறிவுறுத்தினார்கள்.

ஒரு மகள் ஃபஸாஹத் ஹமீது சாஹிபா கூறுகின்றார்கள்: நேரலையாக வரக்கூடிய குத்பாவை ரிக்கார்டிங் செய்து வாட்ஸ்அப்பில் நண்பர்களுக்கு அனுப்பி வந்தார்கள். இவர்களது இரண்டாவது மகன் ஸயீது அஹ்மது சாஹிபும் இவர்களது சிறப்பம்சங்களை எழுதியுள்ளார்கள். மிகவும் நல்லவராகவும், நன்மை செய்யுமாறு அறிவுறுத்தக் கூடியவராகவும் தைரியமானவராகவும் தஃவத்தே இலல்லாஹ் செய்யக் கூடியவராகவும் அவர்கள் இருந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் தற்போதுள்ள நிலைமையில் தஃவத்தே இலல்லாஹ் செய்வது மிகவும் கடினமான பணியாகும்.

நமது அலுவலகத்தில் தனிச் செயலராக இருக்கக்கூடிய ஷஹூர் அஹ்மது சாஹிப் முரப்பி இவர்களது சகோதரியின் கணவர் ஆவார்கள். இவர்கள் எழுதுகிறார்கள்: ஷஹீது மர்ஹூம் ஜமாஅத் பொறுப்புகளை மிகவும் கடின உழைப்புடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நிறைவேற்றுவார்கள். அதிகமான நேரத்தை சேமித்து ஜமாஅத்திற்கு தொண்டாற்ற முயற்சி செய்து வந்தார்கள். எல்லா திட்டங்களிலும் பங்கு பெறக்கூடியவராகவும் இருந்தார்கள். குழந்தைகளுக்கும் ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் உறுதியான தொடர்பு வைத்திருக்குமாறு அறிவுறுத்தியும் வருவார்கள். தஹஜ்ஜுத் தொழக்கூடியவர்களாகவும், நீண்ட துஆக்கள் செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாரின் பதவிகளை உயர்த்துவானாக! மேலும் இவர்களின் குழந்தைகளைப் பாதுகாப்பவ –னாகவும் அவர்களது உதவியாளனாகவும் இருப்பானாக! மேலும் இவர்களின் குழந்தைகளுக்கும் பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக! அங்கு இவர்களுடைய குழந்தைகளுக்கு ஆபத்து உள்ளது. அல்லாஹ் தனது பாதுகாப்பின் கீழ் அவர்களை வைப்பானாக! மேலும் தனது தந்தையின் நன்மைகளைத் தொடரக் கூடிய நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவானாக! ஆமீன்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 | Thursday 14 JULY 2016 | Issue No. 19

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

# பூகம்பம், சுனாமி மற்றும் உலக சமுதாயங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியின் வருகை

## (டாக்டர் தாரிக் அஹ்மது மிர்ஸா, ஆஸ்திரேலியா - அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 15 ஏப்ரல் 2016, பக்கம் 11)

ஜப்பானில் மார்ச் 2011 -ல் வந்த வரலாற்றில் மிகவும் மோசமான பூகம்பம் மற்றும் சுனாமிக்குப் பிறகு இப்போது ஐந்து வருடங்கள் கடந்து விட்டதையொட்டி முழு நாட்டிலும் அரசாங்க அளவில் அனுதாபம் தெரிவிக்கும் அளவிலும் அந்த இயற்கைப் பேரிடர்களின் நினைவாகவும் சில நாட்களுக்கு முன்னால் ஜப்பானில் நிகழ்ச்சிகள் நடந்தன. ஒரு கணிப்பிற்கேற்ப இந்த சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்கள் 1,80,000 நபர்கள் ஆவர். இவர்கள் அனைவருமே வசிக்க வீடு இல்லாமல் இருக்கின்றனர். ஏறக்குறைய 20,000 பேர் காணாமல் போய் விட்டனர் அல்லது இறந்து விட்டனர். இதைத் தவிர சொத்துகளுக்கும் வியாபாரத்திற்கும் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்த அளவு அழிவு ஏற்பட்டிருப்பதற்கான ஒரு காரணம் பூகம்பம் மற்றும் சுனாமியின் காரணமாக ஃபோக்கோஸுமாவிலுள்ள அணுசக்தி பிளான்ட் அழிந்து போனதமாகும். அதன் அழிவை ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் இப்போதும் முழுமையான முறையில் அழித்து விடவில்லை. இந்த பூகம்பம் மற்றும் கடலில் ஏற்பட்ட பூகம்பங்கள் காரணமாக ஜப்பான் மட்டுமல்லாமல் ஆஸ்திரேலியாவையும் சேர்த்து ஜப்பானுக்கு அருகில் உள்ள மற்ற நாடுகளும் தூரக் கிழக்கிலுள்ள தீவுகளும் கூட மோசமாக பாதிப்பிற்கு ஆளாகி இருக்கின்றன.

ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு த்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 18 மார்ச் 2011 -ல் நிகழ்த்திய தமது ஜுமுஆ பேருரையில் இந்தப் பூகம்பத்தால் ஏற்பட இருக்கின்ற அதிபயங்கர அழிவுகளைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைச் சான்று காட்டியவாறு இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது அல்லாஹ்விடம் குறிப்பாக துஆக்கள் செய்வது, இறைவனுக்கு அஞ்சுவது ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டினார்கள். மேலும் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தை தன்னகத்தே கொண்டிருப்பவர்கள் எவ்வகையிலான தட்ப வெப்ப நிலையில் ஏற்படும் மாற்றத்தையோ அல்லது இயற்கைப் பேரிடர்களையோ பார்க்கும் போது அந்த சமயத்தில் மேலும் அதிகமாக அல்லாஹ்வின் முன்பு குனிகின்றனர்.

தற்காலத்தில் பூகம்பங்கள், புயல்கள், அழிவை ஏற்படுத்தக்கூடிய வெள்ளப்பெருக்கு பற்றிக் குறிப்பிட்டவாறு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா அவர்கள் வழக்கத்திற்கு மாற்றமாக இயற்கைப் பேரிடர்கள் வெளிப்படுவது தொடர்பான ஒரு முக்கிய அம்சத்தையும் அதன் பின்னணி பற்றியும் கவனமூட்டியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

“தட்ப வெப்ப நிலையிலுள்ள மாற்றங்கள் அல்லது பூமியிலிருந்தும் வானத்திலிருந்தும் வெளிப்படும் பேரிடர்கள் ஆகியவை இயற்கைச் சட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றது. சிறிது காலம் கழிந்த பிறகு மீண்டும் இவை வருகின்றன என்று பெரும்பாலார் கருதுகின்றனர். இயற்கைச் சட்டத்திற்கு ஏற்ப பேரழிவுகள் வருகின்றன என்பது சரிதான். பூகம்பங்கள் வரும்போது பூமிக்கு கீழ்மட்டத்திலுள்ள அடுக்குகளில் மாற்றங்கள் பூகம்பங்கள் காரணமாக ஏற்படுகின்றது. நியூசிலாந்து அல்லது ஜப்பான் போன்ற பகுதிகள், தூரக் கிழக்குப் பகுதிகளிலுள்ள தீவுகள் இந்த Belts அதாவது அடுக்குகளுக்கு மேல் உள்ளன. அதன் காரணமாக இந்தப் பகுதிகளில் பூகம்பங்கள் அதிகமாக வருகின்றன என்பதும் சரிதான். ஆனால், இந்தக் காலத்தில் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ள ஏதாவது ஒரு தூதர் தனது உண்மைக்கு ஆதரவாக இத்தகைய பூகம்பங்கள் வருவது குறித்து முன்னறிவிப்பு எதுவும் செய்துள்ளாரோ? என்றும் பார்க்க வேண்டும். (குத்பா ஜுமுஆ 18 மார்ச் 2011 இலண்டனிலிருந்து வெளிவரும் அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகையில் வெளியிடப்பட்டது)

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் சில முன்னறிவிப்புகளை விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வாதத்தை பூகம்பங்கள் மற்றும் பேரழிவுகளுடன் இணைத்தவாறு விளக்கிக் கூறியுள்ளார்கள் என்பதையும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அல்லாஹ்விடமிருந்து தகவலைப் பெற்று இந்த இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பூகம்பங்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முன்னறிவித்திருந்தார்கள். இது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: “எங்கு இந்த இயற்கைச் சீற்றங்களும் பூகம்பங்களும் வருகின்றனவோ அங்குள்ளவர்களுக்கு ஒரு நற்செய்தியும் இருக்கின்றது. அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த நல்ல எண்ணத்திற்கு ஏற்ப அவர்கள் அல்லாஹ்வின் உண்மையான போதனைகளைப் புரிந்து கொண்டால் அவர்கள் இந்த அழிவுகளிலிருந்து காப்பாற்றவும் படலாம்.” (குத்பா ஜுமுஆ 18 மார்ச் 2011)

பல்வேறு உலகளாவிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்திகளுக்கேற்ப டோக்கியோவின் முன்னாள் ஆளுநர் அவர்கள் பகிரங்கமாக மார்ச் 2011 -ல் வந்த சுனாமியை இறை கோபத்தின் வெளிப்பாடாகும் என்று கூறியுள்ளார். பௌதீகத்தை வணங்குகின்ற ஜப்பானியர்கள் மீது இது தண்டனையாக வந்துள்ளது என்று அவர் கூறினார். ஆனால், அதற்குப் பிறகு பல்வேறு துறைகளின் கடுமையான அழுத்தம் மற்றும் கண்டனத்தின் விளைவாக அவர் தனது இந்த வாக்குமூலத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மன்னிப்பு கேட்கும் கட்டாயத்திற்கு ஆளானார். இந்த முன்னாள் ஆளுநர் புத்த மதத்தைச் சார்ந்த ஷிம்உ பிரிவைச் சார்ந்தவராவார் என்று கூறப்படுகின்றது. உலகில் வழக்கத்திலுள்ள பல்வேறு மதங்களின் அறிவிப்புகளிலும் ஏடுகளிலும் இறுதிக் காலத்தில் தோன்ற வேண்டிய எந்த வாக்களிக்கப்பட்ட நபரை பற்றிய குறிப்பு கூறப்பட்டிருக்கின்றதோ அவர் தோன்றும் காலத்தில் வெளிப்படும் அடையாளங்களில் பெரும்பாலும் வழக்கத்திற்கு மாற்றமாக ஏற்படும் பேரழிவுகள், போர்கள், பூகம்பங்கள் விண்ணிலிருந்தும் மண்ணிலிருந்தும் வெளிப்படும் இயற்கைச் சீற்றங்கள் ஆகியவை அடையாளங்களாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

ஜப்பானில் ஓர் ஆராய்ச்சியாளரான *John Hagve* அவர்கள் இறுதிக் காலத்தில் தோன்றவிருக்கின்ற உலகச் சமுதாயங்களுக்காக முன்னறிவிக்கப்பட்ட அந்த மகான் தொடர்பாக தனது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்: *Several Sects of Japanise Buddhism and Shintism foresee a varient of the Buddhist Maitreya, who is to appear after August 8, 1988 (8/8/88). He is the incarnation of the god water, Susano.* அதாவது ஜப்பானில் புத்த மதத்தை மற்றும் ஷிம்உ மதத்தைச் சார்ந்த பல பிரிவுகள் எதிர்காலத்தில் புத்த மதத்தைத் தோற்றுவித்த மைத்திரி புத்தாவிற்கு ஒப்பான வாக்களிக்கப்பட்ட ஒரு நபரைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளன. அவர் 1988 ஆம் வருடத்தின் 8-வது மாதத்தின் 8-வது நாளுக்குப் பிறகு அதாவது 8.8.1988 -ற்குப் பிறகு தோன்றுவார். அவர் வருவது ஒரு வகையில் தண்ணீரின் இறைவனான சுசானோ மீண்டும் இந்த உலகில் வருவதாக இருக்கும். (*Elements Books Ltd. Dorsit 1999* -ல் வெளியிட்ட *“Messiahas. The Visions and Prophecies For The Second Coming”* நூல் பக்கம் 36)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தன்னைப் பற்றி தண்ணீர் என்று கூறியுள்ளார்கள். ஆனால், இது பௌதீகமான தண்ணீர் அல்ல. மாறாக, இது தாகித்திருக்கும் ஆன்மாக்களின் தாகத்தைத் தணிக்கின்ற வாழ்வை வழங்கக்கூடிய ஆன்மீகத் தண்ணீராகும். இந்தத் தண்ணீர் அழிவின் தூதுச் செய்தியாக வந்து மனித வாழ்க்கையை இரவின் இருளாக மாற்றுகின்ற தண்ணீர் அல்ல. மாறாக, தனித்திருக்கும் ஏக இறைவனின் ஒளியின் கிரணங்கள் மூலமாக ஆன்மீக இரவுகளை ஓர் ஒளிமையமான பகலாக மாற்றி இறந்துபோன ஆன்மாக்களுக்கு ஒரு புதிய வாழ்வை வழங்குவதற்குக் காரணமாக இருக்கின்ற தண்ணீராக அது இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

میں وہ پانی ہوں کہ آیا آسماں سے وقت پر　　میں وہ ہوں نورِ خدا جس سے ہوا دن آشکار

“நான் விண்ணிலிருந்து சரியான நேரத்தில் வந்துள்ள தண்ணீராக இருக்கின்றேன். பகல் வெளிப்படுவதற்குக் காரணமாக இருந்த அந்த இறையொளியாக நான் இருக்கின்றேன்” (துர்ரே ஸமீன்)

---

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

பெரும்பாலும் அதில் பொய் மிகைத்திருக்கும். ஆனால் ரஹ்மானிய கனவு அல்லது இல்ஹாமில் உண்மை மிகைத்து விடும். அதாவது ஒட்டு மொத்தமாக இல்ஹாம்களைப் பார்க்கும் போது ரஹ்மானிடமிருந்து கிடைக்கும் இல்ஹாமில் உண்மை அதிகமாக இருக்கும். ஆனால், ஷய்த்தானிய இல்ஹாமில் இதற்கு நேர் மாற்றமான நிலை இருக்கும். ரஹ்மானின் தரப்பிலிருந்து வருகின்ற கனவுகள் அல்லது இல்ஹாம்கள் தொடர்பாக அவை எல்லாமே உண்மையானவையாக இருக்கும் என்ற வார்த்தையை நான் ஏன் பயன்படுத்தவில்லை என்றால் அவற்றிலும் கூட சில இல்ஹாம்கள் அல்லது கனவுகள் உவமை வடிவில் இருக்கின்றன அல்லது அவற்றை அனுமானிப்பதில் ஏதேனும் தவறு ஏற்பட்டு விடுகின்றது. அறிவற்றவர்கள் அத்தகைய முன்னறிவிப்புகளைப் பொய்யானவை என்று கருதுகின்றனர். அவை சோதனைக்காக மட்டுமே வருகின்றன. இறைவனின் சில முன்னறிவிப்புகள் எச்சரிக்கை வடிவில் இருக்கின்றன. அவை தாமதமாக நிறைவேறுவது ஆகுமானதாகும். ஷய்த்தானிய இல்ஹாம்கள் குழப்பவாதியுடனும் தூய்மையற்ற மனிதனுடனும் தொடர்புடையவையாக இருக்கின்றன. ஆனால் ரஹ்மானின் இல்ஹாம்கள் அதிகமாக தூய உள்ளம் கொண்டவர்களுக்கே வருகின்றன. அவர்கள் இறைவன் மீதுள்ள அன்பில் தம்மை மாய்த்துக் கொள்பவர்களாக இருக்கின்றனர்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் பக்கம் 142-144)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad